
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

அரசியல் ஆயுதமா
ஊழல் விவகாரங்க

1-15 செப்டம்பர் '96

ரூ. 3.50




## திமுகவில் அதிமுக கிரிமினல்க

www.padippakam.com

# ஏலத்தை ஏப்பம் விட ரவுடிகள் முயற்சி

நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையத்தில் பல்வேறு பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்கான ஏல ஒப்பந்தங்கள், 21.6.96 அன்று நிர்வாகத்தால் கோரப்பட்டிருந்தன. ஏ.எம். மாணிக்கம் என்ற வசதிமிக்க ஒப்பந்தக்காரர், எல்லா வேலைகளையும் தானே பெற்றுவிட வேண்டும் என்ற வெறியோடு இரகசிய சதி வேலைகளில் இறங்கினார். நெய்வேலி பகுதி தொழிலாளர் பிரச்சாரக் குழுவினரால் அரசியல் ரவுடிகளாக அறிவிக்கப்பட்டிருந்த சொரத்தூர் இராசேந்திரன் மற்றும் ஆதண்டார் கொல்லை இராசேந்திரன் என்ற இரு ரவுடிகளுக்கும் 1,50,000/- ரூபாய் கொடுத்து, தனது அடியாட்களாக வைத்துக் கொண்டார் மாணிக்கம்.

இந்த இரு ரவுடிகளும் ஏல விண்ணப்பம் கொடுப்பதற்குச் சென்ற மேலக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த பன்னீர், அய்யாகண்ணு மற்றும் வேறு சில ஒப்பந்தக்காரர்களையும் நடுவழியில் மறித்து கத்திகளைக் கொண்டு தாக்கி காயப்படுத்தியுள்ளனர். இது பற்றி கேள்விப்பட்ட மேலக்குப்பம் கிராம மக்கள் திரண்டு வந்து, அந்த இரு ரவுடிகளையும் அவர்களது அடியாட்களையும் கற்களைக் கொண்டு தாக்கினர். மக்களின் ஆவேசத் தாக்குதலை ஈடு கொடுக்க முடியாமல் பன்னீர் என்ற ஒப்பந்தக்காரர் காரைத் திருடிக் கொண்டு தப்பி ஓடி விட்டனர், இந்த இரு ரவுடிகளும்.

தகவல்:
தொழிலாளர் பிரச்சாரக் குழு, நெய்வேலி.

# "பொய்கை அரசூர் பண்ணையாரைக் கைது செய்! தாழ்த்தப்பட்ட குடும்பங்களின் மறுவாழ்வுக்கு நிவாரணம் கொடு!

விழுப்புரத்திற்கு அருகேயுள்ள பொய்கை அரசூர் கிராமத்தைச் சேர்ந்த 25 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள், அக்கிராம பண்ணை இராமலிங்க நாயுடுவின் ஆதிக்கத்தை எதிர்த்து வந்ததால், நாயுடுவின் அடியாட் கும்பலால் 18.04.96 அன்று அடித்துத் துரத்தப்பட்டனர். அருகிலுள்ள காரப்பட்டு கிராமத்தில் தஞ்சமடைந்திருக்கும் இத்தாழ்த்தப்பட்டவர்களுக்கு, மீண்டும் தங்கள் கிராமத்திற்கே சென்று வாழ்வைத் தொடங்க நிவாரண உதவிகள் ஏதும் வழங்காது மெத்தனமாக நடந்து வருகிறது. தி.மு.க. அரசு.

இத்தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் கிராமத்திற்குச் செல்லும் பட்சத்தில், "இரு போலீசார் பாதுகாப்பு தருவார்கள்" என அறிவித்துள்ளது மாவட்ட நிர்வாகம். ஆனால் நாயுடுவின் அடியாட்படையாக வலம் வரும் திருவெண்ணெய்நல்லூர் போலீசை இம்மக்கள் நம்பத் தயாராக இல்லை. எனினும், "எங்கள் சொந்த பலத்தை நம்பியே நாங்கள் கிராமத்திற்கு திரும்பிவிட முடியும்; ஆனால் வெறும் கையைக் கொண்டு முழம் போட முடியுமா?" என ஆத்திரத்துடன் வினவுகின்றனர் இவர்கள்.

ஏனெனில் நாயுடு கும்பல் இவர்களின் குடிசைகளை எல்லாம் பிரித்தெறிந்து தரைமட்டமாக்கி விட்டது. குருவி போல் இவர்கள் சேமித்து வைத்திருந்த நெல், அரிசி, பருப்பு போன்ற தானியங்களையும் ஆடு - மாடுகளையும் திருடிச் சென்று, தின்று கொழுத்துத் திரிகின்றனர் மேல்சாதி வெறியர்கள். உலை வைப்பதற்கு மண் அடுப்பு கூட அவர்களது குடிசைகளில் தற்பொழுது இல்லை.

எனவே, "பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய நட்ட ஈடு வழங்கு; இத்தாக்குதல் பற்றி மத்திய புலனாய்வுத் துறை விசாரணைக்கு உத்தரவிடு; சுதந்திரமாக சுற்றித்திரியும் பண்ணையார் நாயுடுவைக் கைது செய்" என்ற கோரிக்கைகளை முன் வைத்து, இத்தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் விவசாயிகள் விடுதலை முன்னணி தலைமையில், சென்னை ம.க.இ.க. ஒத்துழைப்போடு, 9.8.96 அன்று சென்னை குறளகம் அருகே ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பெண்கள், குழந்தைகள் உட்பட 120 பேர் பங்கேற்ற ஆர்ப்பாட்டத்திற்கு திருவெண்ணெய் நல்லூர் பகுதி வி.வி.மு. செயலர் தோழர். நாராயணன் தலைமை தாங்கினார். மக்கள் கலை இலக்கியத் தோழர்கள் சீனிவாசன், குமார், தமிழ்மணி ஆகியோரும் அஞ்சல்துறை தொழிற் சங்கத் தலைவர் தோழர். இளங்கோ சுப்பிரமணியம், தொலைபேசித் துறை தொழிற்சங்கத் தலைவர் காமராஜ், பாரதமிகு மின் துறை தொழிற்சங்கத் தலைவர் கணேசன், வழக்குரைஞர் சிராசுதீனும் ஆர்ப்பாட்டத்தை வாழ்த்திப் பேசினர். அன்று காலை தொடங்கி மாலை வரை நடந்த இந்த ஆர்ப்பாட்டம், தி.மு.க. அரசாலும் தாழ்த்தப்பட்டவர்கள் புறக்கணிக்கப்படுவதை பெருவாரியான மக்கள் மத்தியில் அம்பலப்படுத்திக் காட்டியது.

தகவல்:
வி.வி.மு., திருவெண்ணெய் நல்லூர்.

ஆர்ப்பாட்டத்தில் பொய்கை அரசூர் தாழ்த்தப்பட்ட குடும்பங்கள்





படிப்பகம்

# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 11

**இதழ்: 19-20**

16 ஆக. '96 - 15 செப். '96

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
தபால் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


## அரசியல் ஆயுதமாக ஊழல் விவகாரங்கள்

நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரசின் தயவில்தான் ஐக்கிய முன்னணி அரசு
தொங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் தானே தனிப்பெரும்பான்மையைப் பெறு
வதற்காக வேண்டி தேவே கவுடா, முன்பு நரசிம்மராவ் பின்பற்றிய அதே அரசியல்
தந்திரங்களைக் கடைப்பிடிக்கிறார். அரசியல் கட்சிகளைப் பிளந்து பதவி ஆசை காட்டி,
எலும்புத் துண்டுகளை வீசி, எம்.பி.க்களுக்கு விலை கொடுத்து நரசிம்மராவ் பெரும்
பான்மை பலத்தை அடைந்தார். அதேபோல காங்கிரசை பிளந்து ஒரு பிரிவை தம் பக்கம்
இழுக்கும் முயற்சியில் ஐக்கிய முன்னணி அரசு ஈடுபட்டுள்ளது. போபர்ஸ் ஊழலை
வைத்து மிரட்டியும், சில சலுகைகள் வழங்கியும் சோனியாவிடமிருந்து தனக்கு வந்த
ஆபத்தில் இருந்து தப்பி ஐந்தாண்டுகள் ஆட்சி நடத்தினார் நரசிம்மரவ். அதே உத்தியை
நரசிம்மராவுக்கு எதிராக தேவே கவுடா பிரயோகிக்கிறார்.

நரசிம்மராவ் விசுவாசியான ரமேஷ் பண்டாரிக்கு நாட்டிலேயே மிகப்பெரிய மாநில
மான உத்திரப்பிரதேசத்துக்கு அதுவும் தேர்தல் கால ஆட்சியின் ஆளுநராக பதவி உயர்வு
தரப்பட்டது; நரசிம்மராவுக்கு விசுவாசமான ஜேகிந்தர் சிங் சி.பி.ஐ. இயக்குநராக்கப்பட்
டார்; காங்கிரசு பிளவுபடும், நரசிம்மராவ் பதவியிழப்பார் என்று சொன்னதற்காக பதவிக்
காக மானத்தை அடகு வைக்கும் வகையில் போலிக் கம்யூனிஸ்டு மந்திரி இந்திராஜித்
குப்தா நாடாளுமன்றத்தில் பகிரங்க மன்னிப்புக் கேட்டார். ஊழல் வழக்குகளுக்கு எதிராக
கவசமாக இருந்து காப்பாற்றும் வகையில் முன்னாள் பிரதமர் என்ற முறையில் நரசிம்மரா
வுக்கு "காபினட் மந்திரி" தகுதி அளிக்கப்படும் என்று ஆசை வார்த்தை காட்டப்படுகிறது.

அதேசமயம், அதிகாரத்தில் இருப்பதால் நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில் அவரும்
அவருடைய சகாக்களும் புரிந்த இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் பற்றிய
ஆதாரங்கள் தேவகவுடாவிடம் நிறையவே உள்ளன. வெளிநாட்டில் வாழும் இந்தியரான
ஊறுகாய் வியாபாரி லக்குபாயுக்கு இறக்குமதி ஒப்பந்தம் வாங்கித் தருவதாகக் கூறி
சந்திராசாமி செய்த பணம் பறிப்பு - மோசடியில் கூட்டுக் குற்றவாளியாக நரசிம்மராவ்
சிக்கி முழிக்கிறார். துருக்கியில் இருந்து உர இறக்குமதி ஒப்பந்தம் போட்டு 133 கோடி
ரூபாய் சுருட்டிய வழக்கில் நரசிம்மராவ் மகனும், மகனுடைய மைத்துனனும் சிக்கியுள்ள
னர். ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா எம்.பி.க்களுக்கு இலஞ்சம் கொடுத்த வழக்கில்
குற்றவாளிகளுக்கு எதிராக மேலும் பல ஆதாரங்கள் சிக்கியுள்ளன. நரசிம்மராவை
உருட்டி மிரட்டி (பிளாக் மெயில் செய்து) வைக்கும் இப்படிப்பட்ட ஆயுதங்களில் மேலும்
ஒரு புதிய வரவுதான் முன்னாள் தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் சுக்ராம்
விவகாரம்.

சுக்ராம் வீட்டை சோதனையிட்ட 20 சி.பி.ஐ. அதிகாரிகள், 24 மணிநேரமும் ரூபாய்
நோட்டுக்களை எண்ணியும் தீரவில்லை. "எங்கு பார்த்தாலும், எல்லா இடங்களிலும்
பணம், மூன்று பெரிய "டிரங்கு" பெட்டிகளில் கத்தை கத்தையாக அடுக்கி வைக்கப்பட்டி
ருந்தன. பாலிதீன் பைகளில், போர்வைகளில் கட்டிப் போட்டுக் கிடந்தன" என்று வாய்பி
ளக்கிறார் ஒரு சி.பி.ஐ. அதிகாரி. மொத்தம் 3.61 கோடி ரூபாய் ரொக்கம். இது தவிர
இரண்டு பெட்டகங்களில் நிறைய நகைகள், இன்னும் இரண்டு பெட்டகங்கள் திறக்கப்பட
வில்லை. இவை தவிர டெல்லியிலும், சுக்ராமின் சொந்த ஊரான இமாச்சலப் பிரதேசம்
மண்டியிலும் மாளிகைகள், பெரிய ஓட்டல், வீடு - வீட்டு மனைத் தொழிலில் முதலீடு
என்று ஏராளமான சொத்துக்களைக் குவித்துள்ளார்.

1967-இல் இருந்து 1996 வரை ஏறக்குறைய 30 ஆண்டுகள் மத்திய, மாநில
அரசுகளில் மந்திரியாக இருந்த சுக்ராமின் மீது தொடர்ந்து பல ஊழல் குற்றச்சாட்டுகள்
எழுந்தன. காங்கிரசின் பார்ப்பனத் தலைவர்களிடம் இருந்த சாதி உறவை வைத்துக்
கொண்டு எதிலும் சிக்காமல் தப்பி வந்தார். கடைசியாக, தொலைத் தொடர்புத் துறை
யைத் தனியார்மயமாக்கும் திட்டத்தின் கீழ் உரிமம் வழங்குவதில் இமாச்சலப் பிரதேசக்
கம்பெனி ஒன்றிற்கு 80,000 கோடி ரூபாய்க்குக் குத்தகை பேரத்தில் மோசடி நடந்திருப்ப
தாகப் புகார்கள் எழுந்தன. நாடாளுமன்ற விசாரணைக் குழு அமைக்கும்படி கோரி
அனைத்து எதிர்க்கட்சிகளும் நாடாளுமன்றத்தையே இரண்டு வாரங்கள் புறக்கணித்தன.
ஆனால் அப்படி மோசடி எதுவும் நடக்கவில்லை என்று கூறி உச்சநீதிமன்றம் ஊழல்
பெருச்சாளி சுக்ராமுக்கு நற்சான்று கொடுத்தது. இவரது ஊழல்களை அம்பலப்படுத்திய
பிரிட்டிஷ் பத்திரிக்கைக்கு எதிராக அவதூறு வழக்குப் போட்டு 35 இலட்சம் ரூபாய் நட்ட
ஈடுதரும்படி தீர்ப்பு வாங்கினார். ஆனால் பணம் தனக்கு இலட்சியமில்லை, மானமே
பெரிது என்று சவடாலடித்தார். இந்த விவகாரங்களில் எல்லாம் நரசிம்மராவ் என்ற
அவதாரம் சுக்ராமுக்குத் துணைநின்றது. அதன் காரணம் இப்போது அம்பலப்பட்டுள்
ளது. நரசிம்மராவ் குடும்பத்துடன் தொழில் தொடர்பு கொண்டுள்ள ஐதராபாத் கம்பெனி
யிடமிருந்து தொலைத்தொடர்புத் துறைக்கு சாதனங்கள் வாங்கியதில் சுக்ராம் முறைகேடு
கள் புரிந்துள்ளார். அதனால்தான் சுக்ராம் கையும் களவுமாகப் "பிடிபட்ட பின்னரும் கூட
அவர் மீது நடவடிக்கை எடுக்க மறுத்து, இறுதியில் கட்சிக்குள் போட்டிக் குழுவின்
நிர்பந்தத்தால் கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்தார், நரசிம்மராவ்.

நாட்டின் அரசியல், அதிகார அமைப்பு முற்றிலுமாக அழுகி நாறுகிறது. இந்த
உண்மையைத் தேடி யாரும் அலையவேண்டியதில்லை. பதவியைக் கைப்பறறவும், தக்க
வைத்துக் கொள்ளவும், எதிர்த் தரப்பை வீழ்த்தவும் அரசியல் கட்சிகள் - தலைவர்களும்,
அதிகாரிகளும் தங்களுக்குள் நடத்தும் நாய்ச் சண்டையே கிரிமினல், பொருளாதாரக்
குற்றங்கள் பலவற்றையும் சந்திக்குக் கொண்டு வந்து விடுகின்றது.

www.padippakam.com

# அ.தி.மு.க. கிரிமினல்களின் தாய்க்கழகமாகிறது தி.மு.க.

பண்டோராவின் பெட்டிக்குள் விலை மதிக்க முடியாத பொன்னும் பொருளும் போட்டுக் கொடுத்ததைப் போல சட்டப்பேரவையில் அதீத பலத்துடன் கூடிய ஆட்சி அதிகாரத்தை ஜெயலலிதாவிடம் தமிழ்நாட்டு மக்கள் ஒப்படைத்தார்கள்.

ஆனால் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அவரது ஆட்சியின் கணக்கைப் பார்க்கும் போது பண்டோராவின் பெட்டியைத் திறந்தால் வெளியே வரும் கொடிய நச்சு உயிர்களைப் (விஷ ஜந்துக்களை) போல இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், ஆடம்பர - உல்லாச - ஊதாரித்தனங்கள், மோசடிகள் மிகப் பெரிய அளவில் நடந்திருப்பது தெரிய வருகின்றன. ஜெயா - சசி கும்பலின் அட்டகாசங்கள் ஒன்றும் மக்கள் அறியாததல்ல. கண்டும் கேட்டும் அறிந்தவைதாம். இருந்தாலும் அவை இந்த இந்த வகையில் இவ்வளவு தூரம் நடந்திருக்கின்றனவே என்று வியக்கத்தக்க அளவுக்கு உள்ளன.

தினந்தோறும் பத்திரிகைகளுக்கு நல்ல- வியாபாரம்; வாசகர்களுக்கு நல்ல தீனி. ஆட்சிக் காலத்தில் ஜெயலலிதாவின் விசுவாச துதிபாடியாகவும் ஊது குழலாகவும் இருந்த பார்ப்பன தினமலர், இப்போது "ஒடம்பொறவா ஆட்சி ஊழல் செய்திகளைப் பிரசுரிக்கிறதுக்கு மட்டும் ஒரு தினசரி ஆரம்பிக்கலாமான்னு யோசிக்கிறேன்" என்று கருத்துப் படம் போடுகிறது.

ஜெயலலிதா ஆட்சியில் நடந்த முறைகேடுகள், மோசடிகள், இலஞ்ச ஊழல்கள் பற்றி அந்தந்தத் துறைகளின் இப்போதைய அமைச்சர்களின் பேட்டிகளும் சட்டமன்றப் பேச்சுகளும் தவறாமல் வெளிவருகின்றன. ஜெயலலிதா கும்பல் மீதான தமது குற்றச்சாட்டுகளுக்கான புள்ளி விவரங்களையும் ஆதாரங்களையும் கருணாநிதி அள்ளி வீசுகிறார்.

ஒருபுறம் மத்தியப் புலனாய்வுத் துறை சி.பி.ஐ. அமலாக்கப்பிரிவு/வருமானவரித்துறை ஆகியன ஜெயா - சசி குடும்பத்தினருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. மறுபுறம் மாநிலக் காவல்துறையின் புலனாய்வுப் பிரிவும் அதனுடன் இணைந்து தி.மு.க. அரசு அமைத்துள்ள சிறப்பு விசாரணைக் குழுவும் ஜெயா - சசி குடும்பத்தோடு முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் அதிகாரிகளைக் குறி வைத்துச் செயல்படுகின்றன.

அவர்களுடைய பெரிய வீடுகள், சின்ன வீடுகளோடு பினாமிகள், உறவினர்களின் வீடுகளும் சோதனையிடப்படுகின்றன. ஏராளமாக ரொக்கப் பணமும், நகை நட்டுக்களும், சொத்துக்களும், இரகசிய ஆவணங்களும் சிக்கியுள்ளன. அவர்களுடைய வங்கிக் கணக்குகளும் பாதுகாப்புப் பெட்டகங்களும் முடக்கி வைக்கப்பட்டுள்ளன. சோதனைகளைத் தொடர்ந்து முன் ஜாமீன் கேட்பதும், ஒரு சில கைதுகளும், ஜாமீன் மனு விசாரணைகளும், நிராகரிப்புகளும் நடக்கின்றன.

• ஜெயா - சசி குடும்பத்தின் செல்லப்பிள்ளைகளில் ஒருவரான தினகரன் 65 கோடி ரூபாய்க்கு அந்நியச் செலாவணி மோசடி செய்து வெளிநாட்டில் முதலீடு செய்த குற்றத்துக்காக "காபிபோசா" சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்டுள்ளார்.

• அவரது தம்பிகளான பாஸ்கரனும், சுதாகரனும் மத்திய அமலாக்கப் பிரிவின் பிடியில் சிக்கியுள்ளனர்.

நீதிமன்ற விசாரணைக்கு அழைத்து வரப்படும் முன்னாள் அமைச்சர் செல்வகணபதி



பாஸ்கரன் ஜெ.ஜெ. டி.விக்காக அந்நிய, செலாவணி மோசடி செய்த வழக்கில் கைதாகி இப்போது பிணையில் உள்ளார். இவரது தம்பியும் ஜெயாவின் வளர்ப்புப் பிராணியாக அறிவிக்கப்பட்ட சுதாகரன், ஜெ.ஜெ.டி.வி. பங்குதாரர் என்ற முறையிலும் நீலகிரி கொடநாடு பண்ணையை சசிகலாவின் பங்குதாரராக வாங்கிய வழக்கிலும் சிக்கியுள்ளார். ஆனால் இவர் சிவாஜி கணேசன் வீட்டு மருமகன் என்ற முறையில் அரசியல் தொடர்புகளைப் பயன்படுத்தித் தப்பித்து வருகிறான். பாஸ்கரின் 60 இலட்ச ரூபாய் மதிப்புடைய "லெக்சஸ்" என்னும் அதிநவீனக் கார் இறக்குமதியில் செய்த மோசடி காரணமாகப் பதிமுதல் செய்யப்பட்டுள்ளது.

• ஜெ.ஜெ. டி.வி.யின் தலைவியாக அந்நியச் செலாவணி மோசடி செய்தது; சுசீலா என்னும் மலேசியாவில் வாழும் இவரது பினாமி மூலம் சென்னை அபிராமிபுரம் இந்தியன் வங்கிக் கிளையில் ஏராளமாகப் பணம் போட்டு எடுத்து பரணி ஓய்வு மாளிகைகள் என்ற போலி நிறுவனத்தின் பெயரில் இன்னொரு அந்நியச் செலாவணி மோடி செய்தது; அதே போல கள்ளப்பணம் கொண்டு நீலகிரி கொடநாடு பண்ணையை வாங்கியது; தனது பினாமி சுசீலா பெயரில் செய்யாறு அரசு வங்கியில் கள்ளப்பணம் போட்டு எடுத்தது - இப்படி அடுக்கடுக்கான வழக்குகளில் சிக்கி, சசிகலா சிறையிலடைக்கப்பட்டுள்ளார்.

• இலவச - வேட்டி சேலைத் திட்டத்தில் ஊழல்கள் மோசடிகள் செய்ததாக முன்னாள் அமைச்சர் இந்திர குமாரியும் அவரது தனிச் சிறப்புக் கூட்டாளி வெங்கட்டும் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர். இன்னும் வேறு பிற வழக்குகளில் பல கோடி ரூபாய்க்கு ஊழல் செய்ததாக விசாரணைகள் தொடர்கின்றன.

• ஏழைகளுக்கு வீடு கட்டும் திட்டம், தாழ்த்தப்பட்டோருக்கு சுடுகாடு கொட்டகை போடும் திட்டம், கொடைக்கானலில் விதிகளை மீறி நட்சத்திர விடுதி கட்ட அனுமதியளித்தது ஆகிய ஊழல், முறைகேடுகளுக்காக முன்னாள் அமைச்சர் செல்வகணபதி கைதாகி சென்னை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

• இவர்களோடு இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுக

www.padippakam.com

ளுக்கு உடந்தையாகவும் கூட்டாகவும் இருந்து செயல்பட்ட தியானேசுவரன், சத்தியமூர்த்தி, ஆச்சார்யலு, ஆர்.சி. பாண்டே உட்பட ஏழு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கைதாகியுள்ளனர். இன்னும் சிலர் பணிகளில் இருந்து இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

• இந்தக் கும்பலின் புரட்சித் தலைவி, நிரந்தர முதல்வர், இதய தெய்வம் செல்வி ஜெயலலிதா மீது ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுகளோடு, பல வழக்குகளில் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளார். "டான்சி" நிலம் வாங்கியது, நிலக்கரி ஊழல், மூன்று லட்சம் அமெரிக்க டாலர் அன்பளிப்பாக"ப் பெற்றது உட்பட 12 விவகாரங்களின் வழக்குகளின் கீழ், தான் கைது செய்யப்படலாம் என்று ஜெயாவே குறிப்பிட்டு முன் ஜாமீன் கேட்டுள்ளார்.

• முன்னாள் அமைச்சர்கள் கு.ப. கிருஷ்ணன், ரகுபதி, செங்கோட்டையன், பரமசிவம், சத்தியமூர்த்தி, முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் "சேடப்பட்டி" முத்தையா ஆகியோர் வீடுகள் சோதனையிடப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் மூலம் கொள்ளையடித்ததற்கான ஆதாரங்கள் நிறையவே சிக்கியிருக்கின்றன. கு.ப. கிருஷ்ணன் உட்பட ஓரிருவர் தலைமறைவாகி விட்டனர். எல்லோரும் முன் ஜாமீன் கேட்டு வழக்கு மன்றங்களுக்குப் படையெடுக்கின்றனர். அடுத்து யார் கைது செய்யப்படுவார்கள் என்கிற எதிர்பார்ப்பும் பரபரப்பும் நிலவுகிறது.

ஜெயா - சசி குடும்பத்துக்கும் அதன் பினாமிகள், கூட்டாளிகள், எடுபிடிகளுக்கும் எதிரான இந்த நடவடிக்கைகளுக்கு அரசியல் சாயம் பூசி அனுதாப அலை எழுப்பித் தப்பித்துக் கொள்வதற்கு அவர்கள் முயலுகின்றனர். "தன்னைப் பழிவாங்குவதாக ப. சிதம்பரம் சபதமெடுத்துள்ளார்; ஆகவே, இதற்கெல்லாம் அரசியல் காழ்ப்புணர்ச்சிதான் காரணம்" என்று வாதிடுகின்றனர். "தம்மீது போடப்படும் வழக்குகள் எல்லாம் பொய்யானவை; தமக்கு எதிரான அவதூறுகள்" என்று சொல்லி கருணாநிதியின் கொடும்பாவி எரிக்கும்படி அ.தி.மு.க. ரௌடிகளைத் தூண்டி விடுகிறார்கள். ஜெயலலிதா கைது செய்யப்படுவார் என்கிற பீதியுடன், அப்படிச் செய்தால் கலவரங்களைக் கட்டவிழ்த்து விடப்போவதாக மிரட்டுகிறார்கள். இதற்காக ஜெயாவின் போயசு தோட்டத்தில் கூலிப்பட்டாளத்தைத் திரட்டி வைத்து, பிரியாணியும் சாராயமும் பரிமாறுகின்றனர்.

இந்த எத்தணிப்புகள் எதிர்பார்க்கும் பலனளிக்காது என்பதால், நாளும் இலட்சக்கணக்கில் செலவழித்து நாட்டிலேயே அதிக சம்பளம் வாங்கும் கபில் சிபால், ஜெயின், பராசரன் போன்ற வழக்கறிஞர்களைக் கொண்டு சட்டத்திலுள்ள ஓட்டை, ஒழுகல்களைப் பயன்படுத்தித் தப்பிக்க முயலுகின்றனர். தேவேகௌடா, லல்லு பிரசாத், பிஜு பட்நாயக் ஆகிய ஆளுங்கட்சிக்காரர்களுடன் ஜெயலலிதாவுக்குள்ள நெருக்கத்தையும், விஜய் மல்லையா போன்ற தொழிலதிபர்களுடன் அவருக்குள்ள தொடர்பையும் பயன்படுத்திச் சமாளிக்க முயலுகின்றனர். அரசிலும் அதிகாரிகள் மத்தியிலும் தன்னுடைய ஆட்கள் இருப்பதாக ஜெயா பகிரங்கமாகவே சொல்கிறார்.

காவிரி நதி நீர்ப் பிரச்சினை, இட ஒதுக்கீடு பிரச்சினை, விடுதலைப் புலிகள் ஊடுருவல், சட்ட-ஒழுங்கு கெட்டு விட்டதாகப் புகார் போன்றவற்றை எழுப்பி, தம் மீதான வழக்குகள்-குற்றச் சாட்டுகள் குறித்த கவனத்தைத் திசை திருப்பவும் ஜெயலலிதா கும்பல் எத்தணிக்கிறது.

ஆனால் ஜெயலலிதா என்னதான் நாடகமாடினாலும், தகிடுதத்தம் போட்டாலும் அவற்றைத் தமிழ் நாட்டு மக்கள் நம்பி ஏமாறத் தயாரில்லை. சசிகலா குடும்பத்திடமிருந்து ஜெயலலிதாவை மீட்கும் முயற்சியில் அயராது பாடுபடும் பார்ப்பனப் பத்திரிகைகள் எடுத்த கணிப்பின்படியே பொது மக்களில் பலரும் ஜெயலலிதாவைக் கைது செய்வது உட்பட இன்னும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றே விரும்புகின்றனர். படித்தவர், அறிவாளி என்றெல்லாம் பார்ப்பன ஏடுகளால் இன்னமும் போற்றப்படும் ஜெயலலிதாவின் பேட்டிகள், அறிக்கைகளில் காணப்படும் அகங்காரம், வக்கிரம், திமிர், கோமாளித்தனங்கள் அவர் மீது மேலும் வெறுப்பையும், ஆத்திரத்தையும் தூண்டுவனவாகவே உள்ளன. அவை கண்டு பொது மக்கள் எள்ளி நகையாடுகின்றனரே தவிர, கருணாநிதி அஞ்சுவதைப் போல ஜெயலலிதாவின் மீது அனுதாபம் கொள்ளச் செய்யவில்லை.

**தி.மு.க.வுக்கு எதிரான இரட்டை இலை கும்பலை அரசியலில் இருந்து பிடுங்கி எறிவது தவிர, தமிழ்நாட்டு அரசியலைத் தூய்மைபடுத்தும் நோக்கம் எதுவும் கருணாநிதிக்கு கிடையாது**

ஜெயலலிதாவின் பாதங்களில் வீழ்ந்து கிடந்த அ.தி.மு.க. சமூக விரோதிகள் மூழ்கும் கப்பலில் இருந்து தப்பித்தோம் பிழைத்தோம் என்று வெளியேறுகின்றனர். கொள்ளையடித்த பொதுச் சொத்தைக் காத்துக் கொள்ள போட்டிக் கட்சியை உருவாக்கிட எத்தணிக்கின்றனர். ஜெயா - சசி குடும்பத்தை எதிர்ப்பதன் மூலம், கட்சியைப் பிளப்பதன் மூலம் மீண்டும் செல்வாக்குப் பெற்று ஆட்சியைப் பிடித்து விட முடியும் என்ற நம்பிக்கை உண்மையில் இந்தக் கும்பலுக்குக் கிடையாது. இதன் மூலம் குறைந்தபட்சம் கருணாநிதி - மூப்பனார் கூட்டணியின் மறைமுக ஆதரவுபெற்றுத் தப்பித்து விடலாம் என்ற நப்பாசையில் தனிக் கழகம் கண்டுள்ளனர். ஜெயலலிதாவுக்கும்/ தமது சொத்துக்களைக் காத்துக் கொள்ள (அரசியல் கவசம் அணிந்து கொண்டு) ஒரு அரசியல் ரௌடிகளின் படை இன்னும் தேவையாக உள்ளது. இதற்காகவே சசிகலா குடும்பத்ினரைப் போயசு தோட்டத்தில் இருந்து விரட்டி விட்டதாக, சசிகலாவுடனுள்ள தொடர்பையும் துண்டித்து விட்டதாக நாடகமாடுகிறார்.

சில மாதங்களுக்கு முன்பு வரை மத்திய அமலாக்கப்பிரிவின் சம்மன்களை வெறும் கழிப்பறைக் காகிதமாகத் துடைத்துத் தூக்கி எறிந்து விட்டு பகிரங்கமாகப் பகட்டித் திரிந்த தினகரனும் அவனது சித்தி சசிகலாவும் சிறையில் கிடக்கின்றனர். மாநிலப் போலீசாரின் உடந்தையோடு சி.பி.ஐ. க்கு ஆட்டங்காட்டி வந்த ஆதிராஜாராம், வெல்டிங் குமார் போன்ற ஜெயலலிதாவின் குற்றக் கும்பல் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். கைதானாலும் அரசு மருத்துவமனையின் குளுகுளு அறையில் ஐந்து நட்சத்திர விடுதி விருந்தினராக சகல வசதிகளும் அனுபவித்தவர்களுக்கு இப்போது சிறை. போயசு தோட்டத்தில் சொகுசாக வாழ்ந்த சசிகலா, கூவம் ஆற்றங்கரையில் உள்ள சிறையில், கொசுக்கடியில் சிக்கிக் கொடுமை அனுபவிப்பதாகப் புலம்புகின்றார்.

"என்னை யாரும் ஆட்டவோ அசைக்கவோ முடியாது" என்று திமிரோடு சவால்விட்ட ஜெயாவோ எப்போது கைதாகலாம் என்ற பீதியில் ஆடிப் போயுள்ளார்.

கடந்த ஐம்பதாண்டுகளில், இந்தியாவின் வேறெந்த மாநிலத்திலும் இதுவரை காணாதவாறு முன்னாள் ஆட்சியாளர்களின் அக்கிரமங்கள், அட்டகாசங்கள், பகற்கொள்ளைக்கெதிராக "கடும்" நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது என்பது உண்மைதான்.

ஆனாலும் இந்த நடவடிக்கைகள்



படிப்பகம்

www.padippakam.com



கருணாநிதியிடம் பாவமன்னிப்பு பெற்ற பெரியார் மாவட்ட அ.தி.மு.க.வினர்

எதுவரை போகும்? முன்னாள் ஆட்சியாளர்களின் கிரிமினல், பொருளாதாரக் குற்றங்களுக்கு உரிய தண்டனைகள் வழங்கப்பட்டு, அவர்கள் சூறையாடிய பொதுச் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுமா? அவர்கள் சிறைத்தண்டனை பெற்றாலும் அங்கு அவர்கள் சொகுசாக இல்லாவிட்டாலும் நிம்மதியாக வாழ வாய்ப்பளிக்கப்படுமா அல்லது உடலுழைப்பு உட்பட கடுந்தண்டனை நிறைவேற்றப்படுமா? இதுபோன்ற குற்றவாளிகள் தப்பவே முடியாது என்ற நீதி நிலைநாட்டப்படுமா அல்லது நீதித்துறை, சிறைத்துறை, போலீசின் அழுகிய நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, இந்த ஊழல் பெருச்சாளிகள் தமது வளமான வாழ்வைத் தொடர்வார்களா? - என்பது போன்ற கேள்விகள், சந்தேகங்கள் ஆழமாகவே உள்ளன.

சோதனைகள், வழக்குகள், கைதுகள் என்று பல நடவடிக்கைகள் தொடரும் போதே ஏன் இந்தக் கேள்விகள், சந்தேகங்கள் என்று கேட்கலாம். மத்திய ஆட்சியைப் பொருத்தவரை அரசியல் நோக்கங்கள் நிர்பந்தங்களுக்கேற்பவே சி.பி.ஐ., அமலாக்கப்பிரிவு போன்றவை செயல்பட்டு வருவது பல ஆண்டுகளாக நிரூபிக்கப்பட்டு வருகிறது.

மாநில ஆட்சியைப் பொருத்தவரை, இப்போதைய தி.மு.க. ஆட்சி அதிகாரத்தை அப்படியே சிந்தாமல் சிதறாமல் காத்து, தனது வாரிசு மு.க. ஸ்டாலின் வசம் ஒப்படைக்க வேண்டும் என்கிற குறியை நோக்கமாக வைத்து மட்டுமே பழுத்த அரசியல்வாதி கருணாநிதி காய்களை நகர்த்துகிறார் என்பது உறுதி. இரண்டாவதாக, ஜெயா - சசி கும்பலுக்கும் அதிகாரிகளுக்கும் எதிராக இப்போது எடுக்கப்படும் நடவடிக்கைகள், எதிர்காலத்தில் தனது கட்சி குடும்பத்தினர் உட்பட எல்லா அரசியல்வாதிகள், அதிகாரிகளது குற்றங்களுக்கும் இதே போலச் செய்வதற்கு அடிப்படையை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் கவனமாகவே இருக்கிறார். மூன்றாவதாக, இப்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், எம்.ஜி.ஆர். தலைமையெடுத்த பிறகு இதுவரை நிலவி வந்த தி.மு.க. எதிர்ப்பு-போட்டி சக்தியான ''இரட்டை இலை'' கும்பலை, வேரோடு மண்ணோடு அரசியலில் இருந்து பிடுங்கி எறிவது தவிர, அவர் கூறிக் கொள்வதைப் போல தமிழ்நாட்டு அரசியலைத் தூய்மைப்படுத்தும் நோக்கம் எதுவுமில்லை.

இவையெல்லாம் வெறும் சுத்தக் கற்பனையோ, அவதூறோ அல்ல. இந்த முடிவுகளுக்கு வருவதற்கான அடிப்படைக் காரணங்கள் நிறையவே உண்டு.

இப்போதைய அரசியல், சட்ட அமைப்பின்படி குற்றங்கள் புரியும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தண்டனையின்றி, தப்பித்துக் கொள்ளவும், கொள்ளையடித்த சொத்துக்களை காத்துக் கொள்ளவும் வழிவகைகள் பலவும் உள்ளன. பல வழக்குகளின் வரலாறும், நரசிம்ம ராவ் போன்றவர்களின் வழக்குமன்ற தகிடுதத்தங்களும் இதையே காட்டுகின்றன. இந்த நிலையில் தனிச் சிறப்பான சட்டங்களையும் அமைப்புகளையும் உருவாக்கி, குற்றவாளிகள் தப்பமுடியாத ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளாது, வழக்கமான வழிகளில் வழக்குகள் அதிகாரவர்க்கப் புதைசேற்றுக்குள் தள்ளப்படுகின்றன.

முன்னாள் ஆட்சியாளர்களின் வரம்புக்கு மீறிய சொத்துக்கள், வருமானங்கள், அந்நியச் செலாவணி மோசடிகள் மீதுதான் குற்றங்கள் சுமத்தி, வழக்குகள் போடப்படுகின்றன. இவற்றுக்கான ஊற்று மூலங்கள் குறிப்பாக இவர்களின் இடைத் தரகர்களாகவும், பினாமிகளாகவும், கூட்டாளிகளாகவும் உள்ள பழைய புதிய முதலாளிகள், மர்ம ஆசாமிகள், உள்நாட்டு - வெளிநாட்டுக் கம்பெனிகள் மீது எந்த வித நடவடிக்கையும் கிடையாது. எந்தவொரு ஆட்சியும் ஊழல்மயமாவதில் பங்கு வகிக்கும் இந்த கைய சக்திகள் காப்பாற்றப்படுகின்றன.

கிரிமினல், பொருளாதாரக் குற்றங்கள் புரிந்துள்ள முன்னாள் ஆட்சியாளர்கள், அதிகாரிகள் அனைவர் மீதும் பாரபட்சமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அ.தி.மு.க. கட்சியைச் சிதறடிக்கும் வகையில் பொருக்கியெடுக்கப்பட்ட சில நபர்கள் மீது மட்டுமே வெவ்வேறு அளவுகளில் நடவடிக்கைகள் எடுப்பது தொடருகிறது. ஜெயா - சசி குடும்பத்தினர் அதன் விசுவாசிகள் மீது ''கடும்'' நடவடிக்கைகளும், பிறர் மீது ஒன்று தாராளமாகக் கண்டு கொள்ளாமல் விடுவது அல்லது கட்சிப் பிளவைத் தூண்டும் வகையில் உருட்டி, மிரட்டி நிர்ப்பந்திக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. குறிப்பாக அ.தி.மு.க. ஊழல் படையின் தளபதி கண்ணப்பன் மீது இதுவரை கை வைக்கப்படவே இல்லை.

கிரிமினல், பொருளாதாரக் குற்றங்கள் நாடு முழுவதுமுள்ள அரசியல் அதிகார அமைப்பின் அனைத்து மட்டங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது. மேல் மட்டத்தில் இருந்த ஒரு சிலர் மீது நடவடிக்கை எடுத்தாலே, அந்த அமைப்பு முழுவதும் திருந்திவிடும் என்று கூற முடியாது. ஆளும் கட்சியின் கிராமக் கிளைச் செயலர், அரசு அமைப்பின் கிராம அதிகாரி வரை புரையோடிப் போன குற்றப்போக்கைக் களைவதற்கான ஒரு நடவடிக்கையும் இல்லை. குற்றம் புரிந்த இரண்டாம், மூன்றாம் நிலைத் தலைவர்கள் தமக்குக் கைவிலங்கு வரும் என்று அஞ்சிப் பதுங்கவில்லை. வேறு பசுமையான மேய்ச்சல் நிலங்களைத் தேடி அலைகின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தனது கட்சிக்கும் வாரிசுக்கும் எதிராக பழைய அ.தி.மு.க. சக்திகள் வேறொரு அணியாகத் திரண்டு விடக் கூடாது என்பதற்காகவே, இதுவரை ஜெயா - சசி கும்பலின் விசுவாச அடியாட்களாக இருந்த அ.தி.மு.க. ரௌடி அரசியல்வாதிகளான மயிலை எம்.கே. பாலன், ''கராத்தே'' பாலசுப்பிரமணியன், நெகமம் கந்தசாமி, புரசை ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி உட்பட பலருக்கும் பாவமன்னிப்பு வழங்கி, தாய்க் கழகத்தில் இணைத்துக் கொண்டு வருகிறார். இதன் மூலம் தனது கழகத்திலுள்ள ஊழல் பெருச்சாளிகளான ஆற்காடு வீராசாமி, துரைமுருகன் அரசியல் ''தாதா''க்களான சைதை கா. கிட்டு, தூத்துக்குடி பெரியசாமி, சிவகாசி சீனிவாசன் போன்றவர்களின் கரங்களைப் பலப்படுத்தி வருகிறார்.

ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# கென் சரோ-விவா -இவனல்லவோ மக்கள் கலைஞன்

கென்னுல் பீசன் சரோ - விவா — அனைவரும் அறியும் வண்ணம் கூறுவதென்றால் கென் சரோ - விவா. நைஜீரியாவை ஆண்டு வரும் இராணுவக் கொடுங்கோலர்களையும், அக்கும்பலைத் தாங்கி வரும் தேசங்கடந்த எண்ணெய் தொழிற்கழகங்களையும் எதிர்த்து வந்த இந்தக் குரல்வளை நெறிக்கப்பட்டு பத்து மாதங்கள் உருண்டோடி விட்டன.



ஷெல் மற்றும் செவ்ரான் என்ற இரு தேசங்கடந்த எண்ணெய் தொழிற்கழகங்களால், நைஜீரியாவின் வற்றாத ஜீவ நதியான நைஜீர் ஆறும், அந்நாட்டின் வளம் நிறைந்த ஒகோனி பகுதியும் எண்ணெய் கழிவுக் குட்டைகளாக மாறின. ஒகோனி பழங்குடி விவசாயிகளின் - மீனவர்களின் வாழ்க்கை, எண்ணெய் ஈட்டித் தரும் அமெரிக்க டாலருக்காகச் சூறையாடப்பட்டது. தனது சொந்த இன மக்களின் வாழ்வுரிமைக்காக கென் சரோ - விவா தொடங்கிய இயக்கம்தான் ''மொசாப்'' எனப்படும் ஒகோனி மக்களது உயிர் வாழ்வியக்கம்.

கென் சரோ - விவாவின் தலைமையில் எழுந்த தொடர்ச்சியான போராட்டங்களின் காரணமாக 1992-ஆம் ஆண்டு ஷெல் நிறுவனம் நைஜீரியாவை விட்டு வெளியேறியது. ஆனாலும் ''ஷெல்'', தனது பழிவாங்கும் வஞ்சத்தை, நைஜீரியாவின் ஆளும் கும்பலின் மூலம் 95-ம் ஆண்டு இறுதியில் ஈடேற்றிக் கொண்டது.

கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு தொடர்ந்து 18 மாதங்கள் இராணுவக் காவலில் வைக்கப்பட்டார் கென். கால்களிலும் விலங்கைப் பூட்டி, சிறை அறைக்குள் அவர் சுதந்திரமாக நடப்பதைக்கூட தடை செய்தனர் இராணுவக் கொடுங்கோலர்கள். விசாரணை நாடகத்தின் முடிவு என்னவாக இருக்கும் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்தார், கென்.

''தூக்குமேடை ஒழுங்காக இயங்குகிறதா?'' எனப் பரிசோதித்துப் பார்க்க, நைஜீரிய இராணுவக் கும்பல் பொம்மைகளைப் பயன்படுத்தவில்லை. மாறாக, கென்னின் சக தோழர்கள் நான்கு பேர், சோதனைச் சாலை எலிகளைப் போல தூக்கிலேற்றப்பட்டனர்.

அதன்பின்தான் கென் தூக்கு மேடைக்குக் கொண்டு வரப்பட்டார்.

1941-ஆம் ஆண்டு நைஜீரியாவின் தென் பகுதியில் போரி எனுமிடத்தில் பிறந்த கென் சரோ - விவா கல்லூரி விரிவுரையாளராக, மளிகை வியாபாரியாக, பத்திரிகையாளராக, கதை, கவிதை, நாடக ஆசிரியராக, குழந்தை எழுத்தாளராக - எனப் பல தளங்களில் இயங்கினார்.

இலக்கியத் திறன் வாய்ந்த கென்னை ஆப்பிரிக்க கண்டமெங்கும் அறியாதவர்கள் யாருமில்லை எனக் கூறலாம். தான் பிறந்த வளமிக்க ஒகோனி மண்ணைப் பற்றி, ''ஒரு பூவனம்'' என்ற தலைப்பில் சிறுகதைகள் எழுதத் திட்டமிட்டிருந்தார், கென். ஆனால், இதற்கு மாறாக அவர் எழுதியதோ ''நைஜீரியாவில் இனப்படுகொலை: ஒகோனி மக்களின் சோகம்.''


''நைஜீரியாவைப் போன்று இக்கட்டான சூழல் நிலவும் ஒரு சமூகத்தில் இலக்கியத்தை அரசியலில் இருந்து பிரித்து விட முடியாது; உண்மையில், இலக்கியம் அரசியலில் அடியெடுத்து வைப்பதன் மூலம், அரசியலில் தலையீடு செய்வதன் மூலம் சமூகத்திற்குச் சேவையாற்ற வேண்டும்'' என எழுதினார் கென்.

1980-களில் கென் தயாரித்த ''பாஸியும் அவனது நண்பர்களும்'' என்ற தொலைக்காட்சித் தொடர், ஆப்பிரிக்க கண்டம் முழுவதும் மூன்று கோடி இரசிகர்களைப் பெற்றிருந்தது; சோம்பேறிகளின் கூட்டம், எப்படியெல்லாம் தந்திரங்கள் செய்து, பெரும் செல்வத்துக்கு அதிபதியாகத் துடிக்கிறார்கள் என்பதைக் கிண்டல் செய்து சாடியது இத்தொடர். இதன் நாயகன் பாஸி, நைஜீரிய இராணுவக் கும்பலின் குறியீடாகக் கொள்ளப்பட்டான்.

கென்னின் ''ஸோசபாய்'' (Soza-boy) என்ற ஆங்கில நாவல், ஆப்பிரிக்க கண்டத்தின் மாபெரும் யுத்த எதிர்ப்பு நாவலாகக் கருதப்படுகிறது. ''இருட்டுச் சமவெளியின் மேல்'' என்ற தனது நினைவுக் குறிப்புகளில், ஒகோனி இன மக்கள் இராணுவக் கும்பலின் பிரிவினைக் கனவுகளுக்கு எதிராகப் போராடிய வரலாற்றைச் சித்தரித்துள்ளார், கென்.

''ஒரு மாதமும் ஒரு நாளும், தடுப்புக் காவல் குறிப்பேடு'' என்ற நூல், கென் தூக்கிலிடப்பட்ட பின் வெளி வந்துள்ளது. இந்த நூலின் இறுதிப் பகுதியை சிறையில் மிக இரகசியமாகத் தயாரித்தார், கென். நைஜீரியாவில் எதிரும் புதிருமாக நின்று மோதிக் கொண்டு வரும்

''ஷெல்'' எண்ணெய் நிறுவனத்தை எதிர்த்து 'ஒகோனி' இன மக்களின் ஆர்ப்பாட்டம்






படிப்பகம்

www.padippakam.com

இருவேறு மக்கட் பிரிவுகளின் சமகால வாழ்க்கையைப் பற்றி இந்த நூல் ''சர்ரியலிஸ''ப் பாணியில் சித்தரிக்கிறது.

''இரையைத் தேடி அலையும் புலியைப் போல, அநீதி நைஜீரியாவை வேட்டையாடி வருகிறது. கோமாளிகளின் தயவில்தான் உயிர் வாழ வேண்டும் என்பதை விட, அவமானம் தரத் தக்கது வேறு எதுவும் அல்ல; அரசு அதிகார இயந்திரங்கள் கண்ணுக்குத் தெரியாத தூசு போல உன்னைக் கூனி குறுக்கிவிடுவது தீமையாகும்'' என இந்நூலில் நைஜீரியா இராணுவக் கொடுங்கோன்மை பற்றி எழுதினார், கென்.

இராணுவச் சிறைக் கொடுமைகளை ''ஜேப்ஸ் சிறைக் கைதிகள்'', ''பிடாடம்ப்ரோக்கின் சிறை'', ''லெமோனா'' என்ற நாவல்களில் சித்தரித்தார் கென். ''லெமோனா''வில், ''ஓகோனி இனப் படுகொலை புதிய பரிமாணத்தை எட்டிவிட்டது; நான் உயிரோடிருப்பேன் எனில், எனது அடுத்த நூலில் அது பற்றி எழுதுவேன்'' எனக் குறிப்பிட்டிருந்தார், கென்.

லெமோனாவை வெளிவரவிடாமல் தடுப்பதற்காக அதன் கையெழுத்துப் பிரதி திட்டமிடப்பட்டு இரகசியமான முறையில் திருடப்பட்டது; கென் மோசடிக் குற்றச்சாட்டின் கீழ் தூக்கில் இடப்பட்டார்.

மரணம் கென்னுக்கு என்றும் அச்சத்தை ஏற்படுத்தியதில்லை; ஏனெனில், ''தவறை சரி செய்யும் போராட்டத்தில் இறப்பதென்பது வாழ்வின் மிகப் பெரும் பரிசாகும்; ஆம்! வாழ்வின் பரிசு அது... எனது உணர்வெழுச்சியை உடைத்தெறிந்து விட முடியாது'' என எழுதிய மக்கள் கலைஞன் கென். அத்தேசியப் போராளியின் நினைவு என்றென்றும் நீடுழி வாழ்க!

● மாரி

## பிழைதிருத்தம்

புதிய ஜனநாயகம் 1-15 ஜூலை'96 இதழில், 2-ம் பக்கத்தில் வெளியாகி இருந்த ''வி.வி.மு.க.கு எதிராக ஊர்க் கட்டுப்பாடு'' என்ற செய்தியின் இறுதிப்பகுதியில், ''மீனாட்சிபுரம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி பண்ணுவதாகவும், தங்க இடம் கொடுப்பதாகவும்'' தோழர். இரவியை போலீசு மிரட்டிய பொழுது, அவர் எழுதிக் கொடுக்க மறுத்துவிட்டார் என எழுதியிருந்தோம். இது தவறு. தோழர். இரவி எழுதிக் கொடுத்தார் என்பதுதான் உண்மையாகும். ''எங்களது கவனக்குறைவால் நேர்ந்த இக்கருத்துப் பிழைக்கு வருந்துகிறோம். இனி இதுபோல் தவறுகள் ஏற்படா வண்ணம் கவனமாகச் செய்திகளை வெளியிடுவோம்'' என சுயவிமர்சனம் செய்து கொண்டு, உறுதி அளிக்கிறோம்.

ஆசிரியர் குழு

# தேவர் சாதியினர் சதி! தாழ்த்தப்பட்டவர் படுகொலை!

கடந்த ஜூலை மாதம் 12-ந் தேதியன்று காமராசர் மாவட்டம் - வத்திராயிருப்பில் நடந்த ஜல்லிகட்டில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த நீராத்துலிங்கம் கத்தியால் குத்தப்பட்டு இறந்து போனார்; அழகர், விட்டி என்ற இருவரும் கத்திக் குத்தால் காயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ''ஜல்லிகட்டில் கோஷ்டி மோதல்'' என்ற தலைப்பில் பத்திரிகைகளாலும் தமிழக அரசாலும் இப்படுகொலை பூசி மெழுகப்பட்டது.

தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த கண்ணன் என்ற இளைஞர், ''உளியன் வகையறா''வுக்கு நெருக்கமான சபரிமலைத் தேவரின் மகளை காதல் திருமணம் செய்து கொண்டார். இதனால் ஜல்லிகட்டு பந்தயத்தைப் பயன்படுத்தி, கண்ணனைத் தாக்கிவிட ''உளியன் வகையறாவினால்'' சதித் திட்டமிடப்பட்டது. இச்சதியின் காரணமாகவே, வழக்கத்திற்கு மாறாக ஜல்லிகட்டு நடப்பதை வத்திராயிருப்பு மற்றும் கூமாபட்டி என்ற இரு ஊர்களைத் தவிர்த்து, பிற கிராமங்களுக்குச் சொல்லியனுப்பவில்லை.

பந்தயத்தின் இடையிலேயே, சேத்தூர் காவல் நிலையத்தில் போலீசாகப் பணிபுரியும், ''உளியன் வகையறா''வைச் சேர்ந்த சலவைக் கருப்பனும் அவனது ஆட்களும் கூமாபட்டியைச் சேர்ந்த நீராத்துலிங்கத்தையும் கண்ணனையும் தாக்கத் தொடங்கினர். பிரச்சினை வேறுவிதமாகச் செல்வதை உணர்ந்து கொண்ட அழகர் என்பவர், கண்ணனைக் காப்பாற்றி தப்பி ஓடச் செய்தார்; சலவைக் கருப்பனின் ஆட்கள் நீராத்துலிங்கத்தையும், அழகரையும், விட்டியையும் கத்தியால் குத்தித் தாக்கினர். இம்மூவரில் நீராத்துலிங்கம் குடல் சரிந்து அதே இடத்திலேயே இறந்து போனார். தாக்குதல் நடந்த அன்று சலவைக் கருப்பன் பணியில் இருந்தபடியே பந்தயத்தில் கலந்து கொண்டான் என்பது குறிப்பிடத்தக்கது.

நீராத்துலிங்கத்தின் உடலை அடக்கம் செய்த பின்பு ஆத்திரங்கொண்ட தாழ்த்தப்பட்ட இளைஞர்கள், தேவர் சாதியினரின் தென்னந்தோப்புகளை வெட்டிச் சாய்த்தனர்; மோட்டார் மற்றும் பம்ப் செட்டுகளைக் கிணற்றில் வீசியெறிந்தனர். இத்தாக்குதலின் பொழுது தேவர் சாதியைச் சேர்ந்த மயில்சாமி என்ற இளைஞர் கொலை செய்யப்பட்டார்.

இக்கலவரத்திற்கு தேவர் சாதியினர்தான் பிரதானக் காரணம் என்பதை வசதியாக மறைத்துவிட்டு, ''இரு பக்கமும் தவறு உள்ளது'' என நடுநிலைவாதிகளைப் போல பேசினர், காவல் துறையினர். ஆனாலும் கலவரம் நடந்த மறுநாளே மாவட்ட காவல்துறை அதிகாரிகளும், வத்திராயிருப்பு போலீசாரும், ஊர் தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்தாரை மிரட்டி ''கண்ணன், விட்டி, பட்டாணி, தங்கச்சாமி, முத்துசாமி, நடராசன்'' ஆகியோரைக் கைது செய்தனர். சேகர் என்பவரைத் தேடிப் பிடித்து உடனே ஒப்படைக்க வேண்டும் என அதிகார உத்தரவிட்டுச் சென்றனர்.

சேகர், தேவர் சாதியைச் சேர்ந்த மயில்சாமி கொலையுண்ட பொழுது, வத்திராயிருப்பில் இல்லை. ஊர்ப் பஞ்சாயத்து சொல்லியபடி, மதுரையில் சிகிச்சை பெற்று அழகரையும் விட்டியையும் பார்க்கச் சென்றிருந்தார். ஆனாலும் புரட்சிகர இயக்கங்களோடு சேகர் தொடர்பு வைத்திருக்கிறார் என்ற ஒரே காரணத்திற்காகவே அவரையும் கைது செய்துவிட நாயாய் அலைகின்றனர் போலீசார். ஆட்சிகள் மாறினாலும், மேல்சாதி வெறியர்களும், போலீசும் தாழ்த்தப்பட்டோரை நரவேட்டையாடி வருவதை நிறுத்திவிட மாட்டார்கள் என்பது தான் வத்திராயிருப்பு படுகொலை தெளிவுபடுத்தும் உண்மை.

தகவல்:
புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, இராசபாளையம்


## எமது விற்பனையில் புதிய வெளியீடுகள்

• இந்தியப் பெரு முதலாளி வர்க்கம்
(சுனிதி குமார் கோஷின் இந்திய தரகு முதலாளிகள் பற்றிய நூல்) - ரூ. 80.00
• மாவோவின் சிந்தனைகள் ரூ. 20.00

கீழைக்காற்று, 10, ஔலியா சாகிபு சந்து, எல்லீசு சாலை, சென்னை - 600 002.




படிப்பகம்

www.padippakam.com



## சர்வாதிகார நாட்டில் ஜனநாயக இடிமுழக்கம்

இந்தியாவின் தென் கிழக்கே, ராணுவ சர்வாதிகார ஆட்சி நடக்கும் இந்தோனேசியாவில் நீண்ட நெடுங்காலத்துக்குப் பிறகு ஜனநாயகத்துக்கான போராட்டம் வெடித்துள்ளது. 30 ஆண்டு கால சுகர்டோவின் சர்வாதிகார ஆட்சிக்கு சாவு மணி அடிக்க ஆரம்பித்துவிட்டதை இப் போராட்டம் உணர்த்துகிறது.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களும் கம்யூனிசப் போராளிகளும் ஒன்றிணைந்து, ஆயுதப் போராட்டத்தின் மூலம் தேசியவாதி சுகர்னோ தலைமையில் இந்தோனேசியாவின் தேசிய விடுதலையைச் சாதித்தனர். ஆனால் 1966-ல் சுகர்னோவைச் சுட்டுக் கொன்று, ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிய சுகர்டோ, கம்யூனிஸ்டுகளையும் நாட்டுப்பற்று கொண்டோரையும் நரவேட்டையாடி ராணுவ சர்வாதிகாரத்தை நிறுவினார். நாட்டில் 3 அரசியல் கட்சிகள் தவிர மற்ற அனைத்தும் தடை செய்யப்பட்டன. ஜரியன் ஜாவா, கிழக்கு திமோர் ஆகிய சிறுபான்மை தேசிய இனங்கள் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டன. வளமிக்க இந்தோனேசியா ஏகாதிபத்தியங்களின் வேட்டைக்காடாக்கப்பட்டது. ராணுவ கும்பலின் ஆதரவுடன் மோசடித் தேர்தல்களை நடத்தி, சர்வாதிகாரி சுகர்டோ தொடர்ந்து 30 ஆண்டுகளாக அந்நாட்டின் அதிபராக நீடித்து வருகிறார்.



போராட்டத்தை ஒடுக்கும் இந்தோனேஷியா இராணுவம்;
உள்ளே எதிர்க் கட்சி தலைவி மேகாவதி

சுகர்டோ அரசு அங்கீகரித்துள்ள எதிர்க்கட்சியான இந்தோனேசிய ஜனநாயகக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான மேகாவதி, மறைந்த தேசத்தந்தை சுகர்னோவின் மகள் ஆவார். கடந்த ஜூலை 20-ம் தேதியன்று இக்கட்சியின் மாநாடு நடந்தபோது, சர்வாதிகாரி சுகர்டோவின் கைக்கூலியான சூர்யாதி கட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிட்டார். ராணுவக் கும்பலின் மேற்பார்வையில் நடந்த இத்தேர்தலில் தில்லுமுல்லு - மோசடிகள் செய்து சூர்யாதி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதை எதிர்த்து மேகாவதியும் அவரது ஆதரவாளர்களும் கட்சி அலுவலகத்தில் உள்ளிருப்புப் போராட்டம் நடத்தினர். ஜூலை 29 அன்று ராணுவக் கும்பல் இவர்களைக் கட்டாயமாக வெளியேற்றித் தாக்கியதும், இச்சம்பவம் நாடெங்கும் காட்டுத் தீயாகப் பரவியது. ஆத்திரமடைந்த மக்கள், ராணுவக் கும்பலுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களில் தன்னெழுச்சியாக இறங்கினர். அரசு கட்டிடங்களும், வங்கிகளும் தாக்கப்பட்டு சூறையாடப்பட்டன. வீதிகளில் இளைஞர்கள் ராணுவத்துடன் நேரடியாக வீரப்போர் புரிந்தனர். பெருமளவில் ராணுவம் குவிக்கப்பட்டு மிருகத்தனமாக ஒடுக்கிய போதிலும், சர்வாதிகார எதிர்ப்புப் போராட்டம் நீறுபூத்த நெருப்பாகவே இன்னமும் நீடிக்கிறது.

1998-ல் பொதுத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில் மக்களின் சர்வாதிகார எதிர்ப்பு அலையைக் கண்டு ஆளும் சுகர்டோ கும்பல் பீதியில் உறைந்து போயுள்ளது. அதேசமயம், ஜனநாயகத்துக்கான போராட்டத்துக்குத் தலைமை தாங்கும் மேகாவதி, ஆளும் வர்க்கத்தின் மற்றொரு பிரிவின் தலைவிதான். இதனால் பாகிஸ்தான், மியன்மார் வழியில், இந்தோனேசிய மக்களின் ஜனநாயகத்துக்கான போராட்டம் திசை தவறிச் செல்வதற்கான வாய்ப்புகளே அதிகமாக உள்ளது.

## தொழிலாளர் வாழ்வைச் சூறையாடும் பாசிஸ்டுகள்

கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாக, பத்தாயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொழிலார் ஒய்வூதிய நிதியை எடுத்து பங்குச் சந்தை சூதாட்டத்தில் ஈடுபடுத்த அண்மையில் நிதியமைச்சகம் முடிவு செய்துள்ளது. தற்போது தொழிலாளர் ஓய்வூதிய நிதியில் ஒரு பகுதியானது இந்திய அரசு வங்கிகள் மூலம் அரசுத்துறை நிறுவனங்களில் முதலீடு செய்யப்படுகிறது. ஓய்வூதிய நிதியினால்தான் நாட்டின் சேமிப்பு விகிதம் 4% அளவில் நீடிக்க முடிகிறது. இந்நிலையில், இந்நிதியை எடுத்து பங்குச் சந்தை சூதாட்டத்தில் ஈடுபடுத்தினால், அதன் இழப்புகள் அனைத்தும் தொழிலாளர் தலையிலேயே விழும். இதுதவிர நாட்டின் சேமிப்பு விகிதம் வீழ்ச்சியடைந்தால், பொருளாதாரம் மீள முடியாத நெருக்கடியில் சிக்கிக் கொள்ளும். ஏற்கனவே அரசுத்துறை நிறுவனங்களின் நிதியை எடுத்து பங்குச் சந்தையில் சூதாடி முந்தைய ராவ் அரசு, அவற்றை திவாலாக்கியதை நாடே நன்கறியும்.

ஆனால் "தொழிலாளர் ஓய்வூதிய நிதியை லாபகரமானதாக்க முடியும்; இதன் மூலம் தொழிலாளருக்கு கூடுதல் ஓய்வூதியத் தொகையைத் தர முடியும். நாட்டின் சேமிப்பு விகிதம் அதிகரிக்கும்" என்று நிதித்துறை செயலாளரும் உலக வங்கியின் எடுபிடியுமான மான்டேக் சிங் அலுவாலியா காதில் பூ சுற்றுகிறார். உண்மையில், புதிய ஆட்சியாளர்களின் நோக்கம் வேறானது. அண்மைக் காலமாக, இந்தியப் பங்குச் சந்தை பெருத்த சரிவை அடைந்துள்ளது. ஊக வணிகச் சூதாட்டத்தா



படிப்பகம்

www.padippakam.com



லும், வரலாறு காணாத தில்லு முல்லு - மோசடிகளாலும் பங்குச் சந்தையே நிலை குலைந்து போயுள்ளது. அதற்கு முட்டுக் கொடுத்து தூக்கி நிறுத்தி, சுறுசுறுப்பாக இயங்குவதாக காட்டவும், அதன் மூலம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் வந்துள்ளதாக புள்ளி விபர சதவீதக் கணக்கு காட்டி சதிராடும் நோக்கத்தோடுதான் நிதிய மைச்சகம் இம் முடிவை அறிவித்துள்ளது. இதன் மூலம் தொழிலாளர் ஓய்வூதிய நிதியை தரகுப் பெருமுதலாளிகளும், பங்குச் சந்தை தரகர்களும் விழுங்கி ஏப்பம் விடுவதுதான் நடக்கும்.

ஏற்கனவே, கடந்த ஆண்டில் தொழிலாளர் ஓய்வூதிய நிதியை முடக்கி, ராவ் - மன்மோகன்சிங் கும்பல் தொழிலாளிகளுக்கு பட்டை நாமத்தைப் போட்டது. பட்ஜெட் பற்றாக்குறையை ஈடுகட்ட ஓய்வூதிய நிதியை விழுங்கிவிட்டு, ஒரு அவசர சட்டத்தின் மூலம் புதிய ஓய்வூதியத் திட்டத்தை தொழிலாளர்கள் மீது திணித்தது. மன்மோகன் சிங்கின் வாரிசான ப. சிதம்பரம், அற்ப அளவே கிடைக்கும் ஓய்வூதியத்தையும் பறித்துக் கொள்ள கிளம்பிவிட்டார். ராவ் ஆட்சியின் போது, புதிய ஓய்வூதியத் திட்டத்தை எதிர்த்து தி.மு.க. சவடால் அடித்தது; இப்போது ஓய்வூதிய நிதியை எடுத்து பங்குச் சந்தையில் சூதாடுவதை முரசொலி மாறன் நியாயப்படுத்துகிறார். தொழிலாளர்களின் தோழனாகக் காட்டிக் கொள்ளும் போலிக் கம்யூனிஸ்டுகளோ, இந்த அயோக்கியத்தனத்தை அறிந்தும் கூட வாய் மூடிக் கிடக்கின்றனர்.

## போலிகளின் ஆட்சியில் புதியதொரு ஊழல்

ஊழலற்ற நேர்மையாளர்களைக் காட்டிக் கொள்ளும் மே. வங்க போலிக் கம்யூனிஸ்டுகள், இப்போது வக்ஃப் வாரிய ஊழல் - மோசடிகளில் சிக்கி விழி பிதுங்கி நிற்கின்றனர். நிராதரவான முஸ்லிம் பெண்கள் - குழந்தைகளின் நலனுக்காகவும், கல்வி நிறுவனங்கள் அமைக்கவும், மதபோதகர்களுக்கு ஊதியமளிக்கவும் முஸ்லிம்களால் வக்ஃப் சொத்துக்கள் உருவாக்கப்பட்டன. தமது சொத்துக்கள் சிலவற்றை வக்ஃப் வாரியத்துக்கு எழுதி வைப்பதென்பது முஸ்லிம் மதநெறியாக உள்ளது. கல்கத்தாவில் வக்ஃப் வாரியத்துக்கு கோடிக் கணக்கில் சொத்துக்கள் உள்ளன. இவற்றில் சில கட்டிடங்களை தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடுவதில் பல ஆண்டுகளாக மிகப் பெரிய மோசடி நடந்துள்ளது. பல பத்தாயிரம் ரூபாய்க்கும் மேல் வாடகைக்குப் போகும் இடங்களை வெறும் ஆயிரம் ரூபாய்க்கு வாடகைக்கு விட்டு இடைத்தரகர்கள் கோடி கோடியாய் சுருட்டியுள்ளனர்.



வக்ஃப் வாரிய ஊழல் மோசடியை எதிர்த்துச் சட்டமன்றத்தில் இருந்து காங்கிரசாரின் வெளிநடப்பு

வீட்டு மனை ஒப்பந்தக்காரர்கள் மற்றும் தரகர்கள் மூலம் நடக்கும் இத்தகைய மோசடியை எதிர்த்து எதிர்க் கட்சியான ராவ் காங்கிரசு, சட்டசபை புறக்கணிப்புப் போராட்டத்தை கடந்த ஜூன் மாத இறுதியில் நடத்தியது. இதையடுத்து, 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசு, வக்ஃப் சொத்துக்கள் மற்றும் வாடகை முறைகேடுகள் பற்றி தனது செயலாளர் சென்குப்தா தயாரித்த ஆய்வறிக்கையை சட்டசபையில் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையோ, வக்ஃப் சொத்துக்களை பராமரிப்பதில் அரசு அக்கறை காட்டாததைச் சாடியது. 1980-லிருந்து சொத்து மற்றும் வாடகைக் கணக்குகள் தணிக்கை செய்யப்படாததையும், ஊழல் - முறைகேடுகள் நடப்பதையும் அம்பலப்படுத்தியது. மே. வங்க சட்டசபை சபாநாயகரான அப்துல் கலீம் பொறுப்பில் வக்ஃப் வாரியம் இருந்த போதிலும், அரசே நேரடியாக வாடகை நிர்ணயம் செய்யாமல், ஒப்பந்தக்காரர்கள் மூலம் வாடகைக்கு விட்டதை அது குற்றம் சாட்டியது. பெருமுதலாளிகளும் இடைத்தரகர்களும் இதன் மூலம் கொழுத்த ஆதாயமடைந்து வக்ஃப் வாரியத்தை திவாலாக்கி விட்டதை இந்த அறிக்கை வேதனையுடன் குறிப்பிட்டுள்ளது.

தனது அரசுக்கே எதிராக இப்படி அறிக்கை வெளியானதைக் கண்டு ஆத்திரமடைந்த பாசு, இந்த அறிக்கையில் எந்தவொரு ஆதாரமோ, சாட்சியமோ இல்லை என்று கூறி நடவடிக்கை எடுக்க மறுத்து விட்டார். காங்கிரசாரோ, மோசடிக்கு துணை நிற்கும் பாசுவை பதவி விலகுமாறும், சி.பி.ஐ. விசாரணையும் கோரி போராட்டத்தை தீவிரப்படுத்துகின்றனர். பாசுவின் அடாவடித்தனத்தால் முஸ்லிம்களின் ஆதரவை இழந்து விடுவோமோ என்ற பீதியில் 'மார்க்சிஸ்டு'கள் கையைப் பிசைந்து கொண்டிருக்கின்றனர்.

## உலகைக் குலுக்கிய சிறைப் போராட்டம்

உலக வரலாறு இதுவரை கண்டிராத மிகப் பெரியதொரு சிறைப் போராட்டத்தை துருக்கி நாட்டில் சிறையில் வாடும் இடதுசாரி புரட்சியாளர்களும் குர்திஷ் தேசிய இனப் போராளிகளும் அண்மையில் நடத்தியுள்ளனர். கடந்த மே மாத இறுதியில் தொடங்கிய இந்த உண்ணாவிரதப் போராட்டம் 69 நாட்களுக்கு நீடித்தது. தலைநகர் அங்காராவின் அருகிலுள்ள பேராம்பாசா சிறையில் ஆரம்பித்த இந்தப் போராட்டம் நாடு முழுவதுமுள்ள சிறைகளில் பற்றிப் பரவியது. முன்னணியாளர்கள் ஒரு நூறு பேருடன் தொடங்கிய இப்போராட்டம் இறுதியில் 3000 இடதுசாரி புரட்சியாளர்களும் 5000 குர்



படிப்பகம்

www.padippakam.com



திஷ் தேசிய இனப் போராளிகளும் பங்கேற்ற மிகப் பெரிய போராட்டமாக விரிவடைந்தது. இப்போராட்டத்தில் பெண்கள் உள்ளிட்டு 11 பேர் உயிர்நீத்து தியாகிகளாயினர்.

இப்போராட்டத்தை ஆதரித்து ஜெர்மனியில் குடியேறிய துருக்கிய இடது சாரிகள் கடந்த ஜூலையில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். துருக்கி அரசுக்குச் சொந்தமான சொத்துக்கள் மீது திடீர் தாக்குதல் நடத்தினர். ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் துருக்கி அரசுக்கு கண்டனம் தெரிவித்து, பொருளாதாரத் தடைகள் விதிக்கப் போவதாக எச்சரித்தன. உலக நாடுகளின் பொதுக்கருத்தும் நிர்ப்பந்தமும் வலுக்கத் தொடங்கிய பின்னரே, துருக்கிய சர்வாதிகார ஆட்சியாளர்கள் போராளிகளுடன் சமரசப் பேச்சுவார்த்தைக்கு வந்தனர்.

துருக்கி நாட்டில் சிறையிடப்பட்டுள்ள 10,000-க்கும் மேற்பட்ட போராளிகள் அனைவரும் பயங்கரவாதக் குற்றம் சாட்டப்பட்ட அரசியல் கைதிகளாவர். பல பத்தாண்டுகளுக்கு மேலாகியும், இவர்கள் மீது சோடிக்கப்பட்ட பொய் வழக்குகள் விசாரணைக்கே வரவில்லை. அதேசமயம் சிறைகளில் கொடூரமான சித்திரவதைகளால் நூற்றுக்கும் மேற்பட்டோர் முடமாகிப் போயுள்ளனர். சிறைச்சாலைகளில் உரிய சுகாதார வசதியோ, மருத்துவ வசதியோ கிடையாது. சக போராளிகளையோ, உறவினர்களையோ சந்திக்கவும் அனுமதி கிடையாது. போராளிகளை தொலைதூர சிறைகளுக்கு இடமாற்றம் செய்வதையும், சிறைக் கொடுமைகளை எதிர்த்தும் நடந்த இம்மாபெரும் போராட்டத்தைக் கண்டு பீதியடைந்த துருக்கிய சர்வாதிகாரிகள், மிலாடி நபி நாளன்று போராளிகளின் கோரிக்கைகளை ஏற்பதாக அறிவித்தனர். அதன் பின்னரே உறுதிமிக்க இப்போராட்டம் முடிவுக்கு வந்தது. துருக்கிய போராளிகளின் இம்மாபெரும் போராட்டம் உலகெங்குமுள்ள புரட்சிகர - ஜனநாயக சக்திகளுக்குப் புதுரத்தம் பாய்ச்சுவதாக அமைந்துள்ளது.

## இந்துவெறி கோட்டை நொறுங்கியது
## பதவிவெறி பாம்பு படமெடுக்கிறது

கட்டுப்பாடுமிக்க தேசியக் கட்சியாகச் சித்திரிக்கப்பட்ட பாரதீய ஜனதா கட்சி குஜராத்தில் இரு கூறாகப் பிளவுபட்டுப் போயுள்ளதோடு, அங்கே பாரதீய ஜனதா ஆட்சி கவிழும் நிலையும் உருவாகியுள்ளது.

கடந்த ஆண்டில், ஆட்சியதிகாரத்தில் உரிய பங்கு கிடைக்காத ஆத்திரத்தில் அதிருப்தி கோஷ்டி தலைவரான வகேலா கலகம் செய்ததைத் தொடர்ந்து, குஜராத்தில் அன்றைய பா.ஜ.க. முதல்வரான கேசுபாய் பட்டேல் நீக்கப்பட்டார். ஆனாலும் வகேலாவை முதல்வராக்காமல், ஆர்.எஸ்.எஸ். — அத்வானி கும்பலின் விசுவாசியான சுரேஷ் மேத்தா முதல்வராக்கப்பட்டு கோஷ்டிப் பூசல் தற்காலிகமாக சமரசம் செய்து வைக்கப்பட்டது. இந்தச் சமரச ஒட்டு வேலையும் நீடிக்காமல், வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது, அவர் பங்கேற்ற பொதுக்கூட்டத்திலேயே வகேலா கோஷ்டியும் முதல்வர் மேத்தா கோஷ்டியும் பகிரங்கத் தெருச் சண்டையில் இறங்கின. இதையொட்டி கட்சி மேலிடம் மேத்தா கோஷ்டி மீது நடவடிக்கை எடுக்காமல் பூசி மெழுகி வந்ததால், தனது ஆதரவாளர்களைத் திரட்டி தனியாக மாநாடு - பேரணி நடத்த வகேலா கிளம்பினார். அதைத் தொடர்ந்து வகேலாவையும் அவருக்கு ஆதரவான எம்.எல்.ஏக்கள் மற்றும் 9 அமைச்சர்களையும் கட்சியிலிருந்து நீக்குவதாக பா.ஜ.க. தலைமை அறிவித்தது. ஆனாலும், கடந்த ஆகஸ்ட் 20-ந் தேதியன்று குஜராத்தில் மிகப் பெரிய பேரணியை நடத்திய வகேலா "ராஷ்டிரிய ஜனதா கட்சி" என்ற பெயரில் புதிய கட்சியைத் தொடங்கி பா.ஜ.க. முகத்தில் கரிபூசியுள்ளார். தனக்கு பெரும்பான்மை எம்.எம்.ஏ.க்களின் ஆதரவு இருப்பதாகக் கூறிவரும் வகேலா, கட்சிமாறிகளின் ஆதரவோடு பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்க்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளார். மாநிலத்தின் காங்கிரசு ஏஜெண்டாக உள்ள ஆளுநர், இதற்குத் திரைமறைவில் இருந்து கொண்டு ஆதரவளித்து வருகிறார்.


புதுக்கட்சி தொடங்கி பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் வகேலா

பா.ஜ.க. தலைமைக்கு எதிராகக் கலகம் செய்து புதிய கட்சியைத் துவக்கியுள்ள வகேலா, பதவி வெறிபிடித்த இன்னுமொரு பிழைப்புவாதிதான்! ஆட்சியைப் பிடிக்கும் பேராசையில் குஜராத்தின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டதாகக் கூறி பிராந்திய வெறியூட்டி, மாநிலத்தின் உரிமையை நிலைநாட்டப் பாடுபடுவேன் என்று சவடால் அடிக்கிறார். பிற்பட்ட சாதிகளின் நல்வாழ்வுக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவேன் என்று வீரவசனம் பேசி அச்சாதியினரின் ஆதரவைப் பெற முயற்சிக்கிறார். சுருக்கமாகச் சொன்னால், இந்துவெறி-பதவிவெறியோடு மாநில உரிமை-பிற்பட்டோர் நலன் முதலான கவர்ச்சிவாதமும் கலந்த வீரிய ஒட்டுரக கட்சியைத் தான் வகேலா கும்பல் நிறுவியுள்ளது. கட்சிக்கு உழைத்த தங்களுக்கு அதிகாரத்தில் உரிய பங்கு தரப்படாத ஆத்திரத்தில் பதவிவெறியர்கள்-பிழைப்புவாதிகளால் உருவான புதியதொரு கொள்ளைக்கூட்டம்தான் இது. ஆனாலும் இத்தகைய பதவி வெறி பிழைப்புவாத கும்பல்களைக் கட்டுப்படுத்த முடியாமல் பா.ஜ.க. தலைமை கட்சி அணிகளிடம் தன்மைப்பட்டுக் கிடக்கிறது. அதன் இந்துத்துவ தேசியம் தேசிய ஒற்றுமை முதலான மதவெறி பாசிசக் கொள்கைகள், அது ஆளும் மாநிலத்திலேயே தோற்றுப் போய் அம்மணமாகி நிற்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



தாழ்த்தப்பட்ட தலைவர்களின் அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்கிய கல்மர்; அருகே கல்மரின் கணவர் அம்ரே

ஐக்கிய முன்னணி கூட்டணி பதவியேற்ற நாளன்றே, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த இருவரை அமைச்சர்களாக்கியது. மனுநீதிக் கட்சியான பா.ஜ.க-வின் பாராளுமன்ற உறுப்பினர்களுள் 41 பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள். மேலும், பாராளுமன்றத்தில் மேல் சாதிக்காரர்களின் பிடி தளர்ந்து, 'பிற்படுத்தப்பட்ட', தாழ்த்தப்பட்டவர்களின் வலு கூடி வருவதைக் காட்டி, ''சமூக நீதிக்கு கிடைத்த வெற்றி'' என ஓலமிடுகின்றனர், மண்டல் ஆதரவாளர்கள். ஓட்டுக் கட்சி அரசியல் அரங்கில் தாழ்த்தப்பட்டவர்கள் ஒரு தீர்மானகரமான சக்தியாக எழுந்து வருகின்றனர் என்பது உண்மைதான். ஆனாலும் இம்மாற்றங்கள், கோடானு கோடி தாழ்த்தப்பட்டவர்களின் அன்றாட வாழ்வில், அவர்களது சமூக உறவில், அவர்களைப் பற்றிய மதிப்பீடுகளில் பிரதிபலிக்கின்றனவா என்பதே கேள்வி!

○ ○ ○

• தாழ்த்தப்பட்டவரான பீனா, உத்திரப்பிரதேச மாநிலம் — காசியாபாத் மாவட்டத்திலுள்ள லோனி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். முடமாகிப் போன கணவனையும், வாலிப வயதுடைய இரு மகன்களையும் பராமரித்து வரும் பொறுப்பு மிக்க தாய் அவர்.

கடந்த மே மாதம் 2-ந் தேதியன்று அக்கிராமத் தலைவன் கிருபால்சிங் சுமன் தனது அடியாட்களோடு போலீசையும் திரட்டிக் கொண்டு பீனாவின் வீட்டிற்கு வந்தான். பீனாவின் மகன்கள் சுதிரும் சுசிலும், ஜகதீஷ் என்பரோடு கூட்டுச் சேர்ந்து கொண்டு, ராம்ரத்தன் லூகாவின் மனைவியின் நகைகளைத் திருடி விட்டதாகக் குற்றஞ் சுமத்தியது அக்கும்பல்.

பீனா, ''என்ன? ஏது?'' என்று விசாரிப்பதற்குள்ளேயே, பீனா, சுதிர், சுசில் மூவரும் போலீசாராலும் அடியாட் கும்பலாலும் கண் மூடித்தனமாகத் தாக்கப்பட்டனர்; தங்கள் கண்ணெதிரேயே சுதிரையும் சுசிலையும் பெற்ற தாயோடு உடல் உறவு கொள்ளச் செய்து, வக்கிரத்துடன் ரசித்து மகிழ்ந்துள்ளது அக்கும்பல். பின்னர் மூவரையும் அரை நிர்வாணமாக கிராமத் தெருவெங்கும் இழுத்துச் சென்றதோடு, அதனைப் புகைப்படமாகவும் எடுத்துக் கொண்டது.

''முன்னரே திட்டமிடப்பட்டு நடந்துள்ள வன்செயல் இது'' என்கிறார், காசியாபாத் மாவட்ட போலீசு

கல்
-இ
பட்ட
'ச
ஆ
கி
கீழ்
தண



படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் சமூக நீதியின் வெற்றியா?

கண்காணிப்பாளர். ஆனாலும் கிராமத் தலைவன் மீது பீனாவைத் தாக்கியதாக மட்டுமே வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கிராமத் தலைவனும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவன் என்பது மேலும் அதிர்ச்சியளிக்கக் கூடிய ஒன்று. உ.பி.யில் பகுஜன் சமாஜ் கட்சியின் எழுச்சி சாதித்திருப்பது இதுதான் போலும்!

• தாழ்த்தப்பட்டவரான கல்மர், உ.பி. மாநிலம் அரித்துவாருக்கு அருகிலுள்ள லஹ்பௌலி கிராமத்தைச் சேர்ந்த இளம் பெண். தனது கணவர் அம்ரேஷ் மற்றும் மூன்று குழந்தைகளுடன் மிக வறிய நிலையில் வாழ்ந்து வந்தார் அவர். இந்நிலையில் அம்ரேஷுக்கு விவசாயக் கூலி வேலை வாங்கித் தந்து, கல்மரின் குடும்பத்துக்கு மிகவும் உதவி செய்து வந்துள்ளான் சலீம் என்ற முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த வாலிபன். காலப் போக்கில் கல்மருக்கும் சலீமிக்கும் இடையே நெருக்கம் அதிகமாகி, திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்து வீட்டை விட்டு வெளியேறிவிட்டனர். அம்ரேஷ் தனது மனைவியின் விருப்பத்துக்குத் தடையாக இருக்கவில்லை. வீட்டை விட்டு வெளியேறிய கல்மரும் சலீமும் பஞ்சாப் மாநிலத்திற்குச் சென்று திருமணம் செய்து கொண்டனர்.

நான்கு மாதம் கழித்து தனது கிராமத்துக்குத் திரும்பி வந்த கல்மரை, அக்கிராம தாழ்த்தப்பட்டோர் பஞ்சாயத்து 'ஒழுக்கங்கெட்டவளாக'க் குற்றஞ் சுமத்தியது. ''விரும்பிய யாரும் கல்மரைக் கற்பழிக்கலாம்'' என்ற காட்டுமிராண்டித்தனமான தீர்ப்பைத் தண்டனையாக வழங்கியது அப்பஞ்சாயத்து. கல்மரின் முன்னாள் கணவன் அம்ரேஷையும் அவரது தாயாரையும் கட்டிப் போட்டு விட்டு, கல்மரின் வீட்டினுள் புகுந்த 11 பேர் (தாழ்த்தப்பட்டவர்கள் பத்து பேரும் முஸ்லீம் ஒருவரும்) கல்மரை மாறிமாறி பாலியல் பலாத்காரப்படுத்தினர். கல்மரின் அலறலைக் கேட்டு, எதிர் அறையில் இருந்த அவளது மூன்று குழந்தைகளும் பீதியில் உறைந்து போயினர். கல்மர் போராடி போராடி மயங்கிச் சரிந்த போதெல்லாம் முகத்தில் தண்ணீரைக் கொட்டி, மயக்கத்தைத் தெளியச் செய்து, ஒருவர் பின் ஒருவராக கல்மரை வேட்டையாடியது அக்கும்பல். மேலும் கல்மரை நிர்வாணமாக மரமொன்றில் கட்டி வைத்து தாக்கியுமுள்ளனர். இரவு தொடங்கி அடுத்த நாள் விடியும் வரை தொடர்ந்த இந்த இழிசெயலுக்கு அக்கிராம தாழ்த்தப்பட்டோர் அனைவருமே மௌன சாட்சிகளாக இருந்தனர்.

ஐந்து நாள் கழித்து கல்மரும், அம்ரேஷும் கொடுத்த புகாரைக் கொண்டு, 18 பேரின் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. ரூர்கி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் கல்மர், ''சலீமை மணந்து கொண்டது எங்களது சொந்த விஷயம்; தண்டிப்பதற்கு எனது சாதியைச் சேர்ந்தவர்களென்றாலும் அவர்களுக்கு என்ன உரிமை உள்ளது?'' என்ற நியாயமான கேள்வியை எழுப்பியுள்ளார். ஆனால் ''கற்பு'' என்ற பார்ப்பனீய கருத்தில் மூழ்கிப் போன தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்து தலைவர்களோ, தங்களது சாதிப் 'பெருமை'யைக் காத்து விட்டதாக மார்தட்டி வருகின்றனர்.

• ''வெண்மணிகள்'' இன்னும் நம் மண்ணில் இருந்து மறைந்து விடவில்லை என்பதற்கு மற்றொரு சான்று பீகார் மாநிலத்தின் பதனிடோலா கிராமத்தில் நடந்துள்ள படுகொலைகள். இருபது ரூபாய் கூலியும் இரண்டு வேளைக் கஞ்சியும் கேட்டு இ.பொ.க. (மா-லெ) தலைமையில் போராடிய தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகளுக்கு எதிராக ரன்பீர் சேனா நடத்திய தாக்குதலில், 11 பெண்கள், 5 குழந்தைகள் உள்ளிட்டு 19 பேர் இறந்து போயினர். ஜூலை மாதம் 11-ந் தேதி நடந்த இந்த பதனிடோலா படுகொலைகள், நிலப்பிரபுத்துவ காட்டுமிராண்டித்தனத்தின் எடுப்பான உதாரணமாக வருணிக்கப்படுகிறது.

சாய்ரா என்ற இளம் பெண்ணைப் பாலியல் பலாத்காரப்படுத்திய ரன்பீர் சேனா குண்டர்படை, அவளது வயிற்றைக் கிழித்து, குடலை வெளியே எடுத்து மாலையாக அணிந்து கொண்டது. மூன்றே மாத கைக்குழந்தை சல்மா காட்டூனின் தலையை கருக்கருவாளைக் கொண்டு இரண்டாகப் பிளந்து, கொன்று போட்டது. லாகோ தேவி என்ற 60 வயது மூதாட்டியை, துப்பாக்கி முனையில் செருகியிருக்கும் கத்தியால் குத்தி, தலைக்கு மேலே தூக்கியெறிந்து கோரத் தாண்டவமாடியது. தங்களது கொலைவெறி நிறைந்த கண்களில் இருந்து தப்பித்து குடிசைக்குள் புகுந்து கொண்டவர்களை, குடிசையோடு கொளுத்திச் சாம்பலாக்கியது. கூப்பிடு தூரத்தில் மூன்று முகாம்களில் தங்கியிருந்த போலீசார் அனை

குற்றம் நிரூபிக்கப்படாமலேயே கீழ்த்தரமாகத் தண்டிக்கப்பட்ட பீனா, சுதிர் மற்றும் சுசில்





படிப்பகம்

www.padippakam.com

வரும், மேல்சாதி வெறியர்களுக்குச் சாதகமாகத் தலையை வெளியே நீட்டிக் கூடப் பார்க்க வில்லை.

பீகாரில் லல்லு தலைமை யில் ஜனதா தளம் ஆட்சியைப் பிடித்த கடந்த ஆறேழு ஆண்டுகளில் 87 தாழ்த்தப்பட்டோர் மேல் சாதி வெறியர் களால் படுகொலை செய்யப் பட்டுள்ள னர். தடை செய்யப் பட்டுள்ள பூமிகார் - ராஜபுதன சாதிக ளைச் சேர்ந்த நிலப் பிரபுக்களின் ரன்பீர் சேனா, பாராளுமன்றத் தேர்தலின் பொழுது அம்மாநிலத் தின் ஆரா தொகுதியில் போட்டியிட்ட ஜனதா தள வேட்பாளருக்கு வெளிப்ப டையாகவே ஆதரவு தெரிவித்தது. இதுதான் 'சமூக நீதிக்' காவலர்களின் உண்மை முகம்!



கூலி உயர்வு கேட்ட தாழ்த்தப்பட்டவர்களுக்கு 'சமூக நீதி' ஆட்சியில் கிடைத்தது மரணம்தான்

• இராசஸ்தான் மாநிலம் - சிகார் மாவட்டத்திலுள்ள பக்ரோடா எனும் ஊரைச் சேர்ந்த இரு இளைஞர்கள், தங்கள் திருமண நாளன்று குதிரை மீதேறி ஊர்வலமாக வந்தனர்; ''பலாய்'' எனும் தாழ்த்தப்பட்ட சாதி யைச் சேர்ந்த அவ்விரு இளைஞர்க ளும் இப்படி குதிரை மீதேறி ஊர்வல மாக வருவது சாதிக் கட்டுப்பாட்டிற்கு எதிரானது எனக் குற்றஞ்சுமத்தப் பட்டு, ராஜபுதன சாதி வெறியர்களால் தாக்கப்பட்டனர்.

• இராசஸ்தான் மாநிலத்தின் உள் ளடங்கிய கிராமமான ஜக்தா பஸா யில், தங்களது நிலத்தை விட்டு வெளி யேற மறுத்து விட்டனர், ''காதிக்'' சாதியைச் சேர்ந்த மூன்று தாழ்த்தப் பட்ட பெண்கள். இதனால் ஆத்திரம டைந்த பிரகலாத் சிங் என்ற ராஜபுதன மேல்சாதி வெறியன், 150 குண்டர்க ளோடு வந்து அவர்களது குடிசைக ளைப் பிய்த்தெறிந்தான். துப்பாக்கி கள், திராவகப் பாட்டில்களோடு வந்த அக்கும்பல், அப்பெண்களை மரத்தில் கட்டி வைத்து, மயக்கமடையும் வரை அடித்துத் தாக்கியது.

• கடந்த வருடம் ஜூன் மாதம் குஜராத் மாநிலத்தில் காதி எனும் ஊரைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்க ளின் வீடுகள், கடைகள் இன்னும் பிற உடமைகளைத் தீயிட்டுக் கொளுத்தி னர் படேல் மேல் சாதியினர். இத்தாக் குதலை தலைமை தாங்கி நடத்தியவன் பா.ஜ.க. அரசின் சுகா தார மந்திரி நிதின் படேல். இத்தாக்குத லைக் கண்டித்துப் போராட்டங்கள் எழவே, உயர் நீதிமன்ற நீதிபதி தலை மையில் விசாரணை நடத்துவதாக வாக்குறுதி அளித்தது, பா.ஜ.க. ஆனால் கடந்த ஒரு வருடமாக நீதிபதி நியமிக்கப்படவில்லை என்பதோடு, ''அப்படியொரு வாக்குறுதி அளித் தோமா?'' எனத் திமிரோடு எதிர்க் கேள்வி போடுகின்றனர், இந்து மத வெறியர்கள்.

• மத்தியப் பிரதேச மாநிலம் - பலார்பூர் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த் தப்பட்ட பெண்மணியை நிர்வாணப் படுத்தி, கிராமத் தெருவில் இழுத்துச் சென்றுள்ளனர் மேல் சாதி வெறியர் கள். இச்சம்பவம் பற்றி விசாரிக்க மாநில காங்கிரசு அரசால் நியமிக்கப் பட்ட அதிகாரிகள், ''இத்தாக்குதலின் பின்னே அப்பெண்ணின் மகன் எங்கே சென்றான் என்பதே மர்மமாக உள் ளது'' எனக் கூறியுள்ளனர்.

• இராசஸ்தான் மாநிலம் - கோடா மாவட்டத்திலுள்ள பாக்லி எனும் கிராமத்தைச் சேர்ந்தவர் கஸ் தூரி பாய். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த இவர், கணவனை இழந்தவர். சில புடவைகளையும் இரு தங்க நகை களையும் திருடி விட்டதாக இவர் மீது குற்றஞ் சுமத்தினர், ''மீனா'' எனும் மலைவாழ் சாதியைச் சேர்ந்த சிலர். எவ்வித விசாரணையுமின்றி, அனாதர வான இப்பெண்மணியை குற்றத்தை ஒப்புக் கொள்ள நிர்பந்தித்து, அவரது இரு கைகளையும் ''டிராக்டர்'' ஒன் றில் கட்டித் தரதரவென்று இழுத்துச் சென்றுள்ளனர்; அவரது பிறப்பு உறுப் பில் அடித்துச் சித்திரவதை செய்த தோடு, பீடி - சிக ரெட் துண்டுகளைக் கொண்டு அவரது கைகளில் சுட்டும் வெறியாட்டம் போட்டுள்ளது இக் கும்பல்.

இத்தாக் குதல் கள் யாவும் கடந்த இரண்டு மூன்று மாதங்களில் தாழ்த் தப்பட்டோர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டவை. சமீபத்தில் பாராளு மன்றத்தில் உள் துறை அமைச்சகம் அளித்த அறிக்கை யொன்றில், கடந்த 95-ம் ஆண்டில் மட் டும் நாடு முழுவ தும் 723 சாதிய மோதல்கள் நடந் துள்ளதாகவும், இவற்றுள் பெரும்பா லானவை தாழ்த்தப்பட்டவர்களுக் கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் இடையேதான் நடந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பீகார், மகாராஷ்டிரா, தமிழ்நாடு இம் மூன்று மாநிலங்களிலும் சாதி மோதல் கள் 25-லிருந்து 30 சதவீதம் அதிகரித் துள்ளதென்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

''இட ஒதுக்கீடு மூலம் அரசு பத விகளில் தாழ்த்தப்பட்டவர்களை அம ரச் செய்வது; தேர்தல் வெற்றியின் மூலம் அரசு அதிகாரத்தைக் கைப்பற் றுவது — இவற்றின் மூலமே தாழ்த்தப் பட்டவர்கள் சமூக விடுதலையைப் பெற்று விட முடியும்'' என ராம் விலாஸ் பாஸ்வான், கன்சிராம் போன்ற தாழ்த்தப்பட்ட சாதித் தலை வர்கள் உருவாக்கி வரும் மாயையைத் தோலுரித்துக் காட்டுகின்றன இச்சம்ப வங்கள். அரசு சலுகைகளும், ஓட்டுக் கட்சி அரசியலும் தாழ்த்தப்பட்டவரி டையே புதிய ஆதிக்க சக்திகளைத் தான் தோற்றுவித்துள்ளன. மேலும் ஓட்டுப் பொறுக்குவதற்காக தாழ்த்தப் பட்ட - பிற்படுத்தப்பட்ட சாதிகளி டையே மண்டல் ஆதரவாளர்களால் திணிக்கப்படும் செயற்கையான கூட் டணிகளால் சாதிப் பகைமையைத் தீர்க்க முடியாது என்பதும் இதிலிருந்து புலனாகிறது.

இனி தாழ்த்தப்பட்டவர்கள் தங் கள் சமூக விடுதலையைச் சாதித்துக் கொள்ள ஒரேயொரு பாதைதான் எஞ் சியுள்ளது. சாதிவெறி கொண்ட இச் சமூக அமைப்பைத் தலைகீழாகப் புரட்டிப் போடும் வலு கொண்ட நக் சல்பாரி புரட்சிப்பாதைதான், அது!

• செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

# காவியுடைகளின் சாயம் வெளுக்குது

இந்துவெறி பாரதீய ஜனதா - சிவ சேனா கூட்டணி ஆட்சி நடத்தும் மகா ராஷ்டிராவின் தலைநகரான பம்பாய் மாநகரம். அங்கு நெரிசல் மிக்க மாதுங்கா பகுதியிலுள்ளது லட்சுமி நிவாஸ் எனும் குடியிருப்புக் கட்டிடம். 51 வயதான ரமேஷ் ராம்ராவ் கினி என்பவர் அக்கட்டிடத்திலுள்ள வாடகைக் குடியிருப்பு ஒன்றில் கடந்த 25 வருடங்களாக தனது குடும்பத்துடன் வசித்து வந்தார். மாதம் ரூ. 3000/- சம்பாதிக்கும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர் அவர்.

இக்குடியிருப்பை அகற்றிவிட்டு அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டப் போவதாகக் கூறி, கட்டிடச் சொந்தக்காரரான லட்சுமிசந்த்ஷா, 1988-லிருந்தே குடியிருப்போரைக் காலி செய்யுமாறு தொந்திரவு கொடுத்து வந்தார். ஷா தனது அடியாட்களை ஏவி, கினி குடும்பத்தை மிரட்டுவதும், தாக்குவதும் உடமைகளை நாசப்படுத்துவதும் தொடர்ந்தது. இருப்பினும், தனது வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத் தடையுத்திரவு ஆணையைப் பெற்று, கினி அக்குடியிருப்பில் தொடர்ந்து வசித்து வந்தார்.

மகாராஷ்டிராவில் பாரதீய ஜனதா - சிவசேனா கும்பல் ஆட்சிக்கு வந்ததும், குடியிருப்போரைக் கட்டாயமாக வெளியேற்றும் கட்டைப் பஞ்சாயத்துக்கான தலைமையிடமாக சிவசேனாவின் ''சாம்னா'' நாளேட்டின் அலுவலகம் மாறியது. அங்கு சிவசேனா தலைவன் பால் தாக்கரேயின் வாரிசுகளான ஜெயதேவ், உத்தவ் மற்றும் மருமகன் ராஜ் ஆகியோரில், யாராவது ஒருவர் முன்னிலையில் கட்டைப் பஞ்சாயத்து நடந்து, குடியிருப்பவர் காலி செய்து விடுவதாக மிரட்டி எழுதி வாங்கப்படுவார்.

லட்சுமி நிவாஸ் கட்டிடச் சொந்தக்காரரான ஷாவும், பால் தாக்கரேயும் நெருக்கமானவர்கள். ஷாவின் மகன் சுமன் ஷாவும், தாக்கரேயின் மருமகன் ராஜும் நெருங்கிய நண்பர்கள். அப்புறம் கேட்கவா வேண்டும்? ராம்ராவ் கினியும் ''சாம்னா'' அலுவலகத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டு, மிரட்டப்பட்டார். அடிக்கடி நடக்கும் இத்தகைய அச்சுறுத்தல்களால் கினி மனமுடைந்து போனார்.

கடந்த ஜூலை 23 அன்று அவர் ''சாம்னா'' அலுவலகத்துக்குச் செல்வதாகவும், இன்று இறுதியாக பிரச்சினை தீர்ந்து விடும் என்றும் தனது மனைவியிடம் கூறிவிட்டுச் சென்றார். வழியில் தனது வழக்கறிஞரைச் சந்தித்து, மாலையில் அவருடன் விவாதிக்க நேரம் ஒதுக்குமாறு கேட்டுவிட்டுச் சென்றார்.

அடுத்த நாள் - ஜூலை 24 அன்று புனாவிலுள்ள கினி மனைவியின் சகோதரியிடமிருந்து ஒரு ''போன்'' செய்தி வந்தது. கினி இறந்து விட்டதாகவும் அவரது உடலைப் பெற்றுக் கொள்ள உடனே வருமாறும் அவர் கூறினார். அதிர்ச்சியில் உறைந்து போன கினியின் மனைவி ஷீலா, துக்கம் தொண்டையை அடைக்க புனாவுக்குச் செல்வதற்குள் கினியின் பிரேதப் பரிசோதனை முடிக்கப்பட்டிருந்தது. அவரது உடல் புனாவிலுள்ள அல்கா திரையரங்கில் கிடந்ததாக போலீசார் கூறினர்.

சாம்னா அலுவலகத்திற்குச் சென்ற தனது கணவரை சிவசேனா குண்டர்கள் கொன்று விட்டார்கள் என்று குற்றம்சாட்டிய ஷீலா, மீண்டும் இரண்டாவது முறையாகப் பிரேதப் பரிசோதனை செய்யக் கோரினார். கினியின் உடலில் காயங்கள் ஏதுமில்லை. ஆனால் அவர் குடித்திருந்தார் என்றும் அதில் ஏதோ விஷம் கலக்கப்பட்டுள்ளது என்றும் பிரேதப் பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

செலவுக்காக பத்து ரூபாய் மட்டுமே எடுத்துச் சென்ற கினி வெகு தொலைவிலுள்ள புனாவுக்கு எப்படிச் செல்ல முடியும்? ஒரு போதும் மதுவைத் தீண்டாதவரான கினி ஏன் குடிக்க வேண்டும்? அவர் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தில் இருந்திருந்தால், நேரடியாக விஷத்தைச் சாப்பிடாமல் ஏன் சாராயத்தில் கலந்து குடிக்க வேண்டும்? என்று அடுக்கடுக்கான சந்தேகங்களை எழுப்பும் ஷீலா, தனது கணவர் கொலைக்கு ராஜ் தாக்கரேதான் காரணம் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறார். மேலும் கினி ஜூலை 23 அன்று தனது வழக்கறிஞரைச் சந்தித்தபோது, அங்கு தவறவிட்டுள்ள ஒரு கடிதத்தில், ''நான் ஒரு வேளை மரணமடைந்தால், எனது சாவுக்கு ராஜ் தாக்கரேயும் சுமன் ஷாவும் தான் காரணமாக இருப்பார்கள்''

பால் தாக்கரேயின் மகன்கள் ஜெயதேவ், உத்தவ் மற்றும் மருமகன் ராஜ்: கிரிமினல் வாரிசுகள்





படிப்பகம்

www.padippakam.com

என்று வேதனையுடன் எழுதியுள்ளார். கினியின் மர்மமான மரணத்துக்கு இக் கடிதம் முக்கிய ஆதாரமாகியுள்ளது.

உதிரத்தை உறையச் செய்யும் இக் கோரக் கொலையை அடுத்து பம்பாய் நகர மக்கள் பீதியும் மறுபுறம் வெறுப்பும் ஆத்திரமும் கொண்டுள்ளனர். இதைச் சாதகமாக்கிக் கொண்டு எதிர் கட்சியான காங்கிரசு, கினி கொலை விவகாரத்தை சட்டசபையில் கிளப்பியும், மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டங்களை நடத்தியும் வருகிறது. அதைத் தொடர்ந்து கட்டிடச் சொந்தக்காரர்களான லட்சுமிசந்த் ஷா, அவரது மகன் சுமன் ஷா, சிவசேனாவின் இளைஞரணி தலைவன் ராணே ஆகியோர் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ராஜ் தாக்கரே இரகசிய போலீசாரால் விசாரிக்கப்பட்டுள்ளார்.



கினியின் மனைவி ஷீலா

• • • • • •

கிரிமினல் - மாஃபியா கும்பல்களின் கூட்டாளிகளான இந்து வெறியர்கள் நடத்திவரும் ராமராச்சியத்தின் யோக்கியதையைக் காட்ட கினியின் கொலை ஒன்றே சான்று கூறப் போதுமானது. கடந்த ஜூன் மாதத்தில் மட்டும் பம்பாய் நகரில் 50-க்கும் மேற்பட்ட கொலைகள் நடந்துள்ளன. இவற்றில் பலவற்றில் தாக்கரே குடும்பமும், பாரதீய ஜனதாவின் துணை முதல்வரான கோபிநாத் முண்டேவின் பெயரும் அடிபடுவதாக போலீசாரே ஒப்புக் கொள்கின்றனர். வீட்டுமனை தொழிலதிபர்களும், பெரு வியாபாரிகளும் சிவசைனிக்குகளிடமிருந்து தமக்கு டெலிபோனில் கொலை மிரட்டல்கள் வருவதாகப் போலீசிடம் முறையிட்டுள்ளனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, கடந்த ஜூலை 15-ஆம் தேதியன்று மகாராஷ்டிரா சட்ட மன்றத்தில், பாரதிய ஜனதா கட்சியின் பெண் எம்.எல்.ஏ.வான முண்டாதா என்பவர், ஒரு உரிமைப் பிரச்சினையை அவசரமாகக் கொண்டு வந்தார். மாநில உள்துறை அமைச்சரும், தனது கட்சிக் காரரும், துணை முதல்வருமான கோபிநாத் முண்டேவும் அவரது சகோதரர் பண்டிட் முண்டேவும் கிரிமினல் கும்பல்களைப் பாதுகாத்து ஆதரவளிப்பதாகப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார்.

கடந்த மே 10-ஆம் தேதியன்று தனது வீட்டின் முன்பு நிறுத்தப்பட்டிருந்த ''ஜீப்''பை அதிகாலையில் சில குண்டர்கள் கொளுத்திவிட்டுத் தப்பியோடியதாகவும், இவர்கள் முண்டேவின் பாதுகாப்புடன் சுதந்திரமாகத் திரிவதாகவும், உயர்மட்ட போலீசு அதிகாரிகளிடம் முறையிட்டும்கூட இக்குண்டர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். தமது கட்சிக்காரரே தமது கிரிமினல் ஆட்சியை வெளிப்படையாகச் சாடுவதைக் கண்டு பாரதிய ஜனதாவினர் செய்வதறியாது முழிக்கின்றனர்.

• • • • • •

மேற்கே மகாராஷ்டிராவில் இந்து வெறியர்கள் கிரிமினல் ஆட்சி நடத்தி கொட்டமடிக்கிறார்கள் என்றால், வடக்கே டெல்லியில் இந்துவெறி அமைச்சர் ஒருவர் காமவெறி பிடித்துக் கூத்தடிக்கிறார். டெல்லி மாநில சுகாதாரத்துறை அமைச்சரான ஹர்ஷவர்தன் தனது வீட்டில் வேலை செய்யும் பணிப்பெண்ணைக் கர்ப்பமாக்கியுள்ளார். இந்த விவகாரத்தை பாரதிய ஜனதா கட்சி எம்.எல்.ஏ.க்களே அண்மையில் சட்டசபையில் கிளப்பி அம்பலப்படுத்தியுள்ளனர். அமைச்சரோ, ''நான் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டால், தற்கொலை செய்து கொள்ளுகிறேன்'' என்று கண்ணீர் மல்க சட்டசபையில் நாடகமாடுகிறார். அமைச்சரின் பாலியல் வன்முறைக்கு ஆளாகி கர்ப்பமடைந்துள்ள பணிப்பெண் உஷாவை, அவரது அடியாட்கள் மிரட்டியதைத் தொடர்ந்து, அமைச்சர் வீட்டுத் தோட்டக்காரன்தான் தனது கர்ப்பத்துக்குக் காரணம் என்கிறார். ஆனால் இதை பாரதிய ஜனதா கட்சிக்காரர்களே நம்பத் தயாராக இல்லை. அதிருப்தி கோஷ்டியினர், அலிகளைத் திரட்டி பாரதிய ஜனதா அலுவலகம் முன்பு கும்மியடித்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். (புது மணப்பெண் கருவுற்றால் அதற்கு வாழ்த்து தெரிவித்து கும்மியடித்துப் பாடி, புது மாப்பிள்ளையிடம் நன்கொடை பெறுவதென்பது வடநாட்டு அலிகளின் வழக்கம்). இதுதவிர, சில மகளிர் அமைப்பினரும் அமைச்சரைத் தண்டிக்கக் கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

ஹவாலா ஊழல், கிரிமினல்களுடன் கூட்டு, பயங்கரவாதப் படுகொலைகள், காமவெறி யாட்டம் என்று பாசிச காங்கிரசு-ஜெயா கும்பலுக்குப் போட்டியாக இந்து வெறியர்கள் வளர்ந்து கொட்ட மடிப்பதை அண்மைக் கால செய்திகளே நிரூபித்துக் காட்டுகின்றன. இந்துவெறி பாசிஸ்டுகள் ஆளும் மாநிலங்களில் அதிருப்தி கோஷ்டிகளே இவற்றை அம்பலப் படுத்தும் அளவுக்கு அவர்கள் நிலை குலைந்து கிடக்கிறார்கள். இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு இந்து வெறியர்களை அம்பலப் படுத்தி முறியடிக்க வேண்டியது தான் இன்றைய தேவையாக உள்ளது.

• குமார்

அமைச்சர் ஹர்ஷவர்தனை அம்பலப்படுத்தி அலிகள் நடத்தும் கும்மியடிப் போராட்டம்.






படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## 'மார்க்சிஸ்டு'களின் குட்டிக்கரணம்

"உயர் தொழில்நுட்பம் தேவைப்படும் தொழில்களில் மட்டுமே பன்னாட்டு நிறுவனங்களை அனுமதிக்க வேண்டும்" என்பதைத் தங்களின் "சுதேசி" தொழிற் கொள்கையாகக் கூறி வருகின்றனர், 'மார்க்சிஸ்டு'கள். ஆனால் மேற்கு வங்கத்தில் ஜோதிபாசு அரசாங்கமோ, உருளைக் கிழங்கு வறுவல் தயாரிக்க பன்னாட்டு நிறுவனமொன்றுக்கு அனுமதி அளித்துள்ளது. இந்நிறுவனம் ஹூக்ளி மாவட்டம் தன்குனி என்னுமிடத்தில் தனது தொழிலகத்தை நிறுவ உள்ளது!

## அழிவின் விளிம்பில் இந்தியாவின் மான்செஸ்டர்

1980 களில் 2,50,000 ஆக இருந்த பம்பாய் மில் தொழிலாளர்களின் எண்ணிக்கை, தற்பொழுது 80,000 ஆக குறைந்து விட்டது. இவர்களில் 70,000 தொழிலாளர்கள் தற்பொழுது வேலை இழந்துவிடும் அபாயத்தில் உள்ளனர். துணி மற்றும் பஞ்சாலைகள் நட்டத்தில் இயங்குவதாகக் காட்டி, ஆலை நிலங்களை "ரியல் எஸ்டேட்" முதலைகளுக்கு முதலாளிகள் விற்று வருவதுதான் இந்த அவல நிலைக்குக் காரணம். வேலை இழப்பது ஒருபுறமிருக்க, தொழிலாளர்களின் குடும்பங்கள், ஆலை குடியிருப்புகளிடமிருந்தும் துரத்தப்படுகின்றனர். இதற்கு எதிரான போராட்டத்தில் ஆலை தொழிலாளர்களோடு, மராத்தி திரைப்பட மற்றும் நாடகக் கலைஞர்களும் கைகோர்த்துக் கொண்டுள்ளனர்.

## ஈழத் தமிழருக்கு உதவத் தடை

இலங்கையில் சந்திரிகா அரசு வன்னிப் பகுதியைப் பிடிப்பதற்காக "உண்மை வெற்றித் தாக்குதல்" என்ற புதிய இராணுவத் தாக்குதலைத் தொடுத்து வருகிறது. மேலும் அப்பகுதிக்கு உணவுப் பொருட்கள் அனுப்புவதைத் தடுத்து, ஈழத் தமிழர்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளி விட்டுள்ளார் சந்திரிகா. இதனால் ஈழத்தமிழர்கள் தமிழகம் நோக்கி அகதிகளாக வரத் துவங்கியுள்ளனர். அகதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் பொருட்டு தி.மு.க. அரசு, "அகதிகளை ஏற்றி வரும் மீன்பிடி இயந்திர படகுகளை, அதிகாரிகள் கைப்பற்றலாம்" என உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவைக் கண்டித்தும், "அகதிகளை ஏற்றி வருவது தவிர்க்க முடியாதது" எனக் கோரியும் இராமேசுவரம் பகுதி மீனவர்கள் ஆகஸ்ட் 19-ந் தேதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

## இந்தியாவில் அமெரிக்க களிவெறியாட்ட அரங்கம்

அமெரிக்காவைச் சேர்ந்த "வார்னர் பிரதர்ஸ்" என்ற திரைப்பட நிறுவனம், இந்தியாவில் திரைப்பட மற்றும் களிவெறியாட்டப் பொழுது போக்கு அரங்குகளைக் கட்டிக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பங்கு தாரர்கள் யாருமின்றி நேரடி அந்நிய முதலீட்டு திட்டத்தின் கீழ், 303 கோடி ரூபாய் முதலீட்டில் இத்திரையரங்குகள் முக்கிய நகரங்களில் அமைகவுள்ளன.

## [illegible]

கிரிமினல் குற்றச் சாட்டுகளால் ஐக்கிய முன்னணி மந்திரி சபையில் இருந்து தூக்கப்பட்ட தஸ்லிமுதீன், தனது தொகுதியான கிஷன் கஞ்சில், உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி நிர்வாகத்திடம் பத்து லட்ச ரூபாய் மாமூல் கேட்டு மிரட்டியுள்ளார். மாமூல் தர மறுத்த நிர்வாகிகள், தஸ்லிமுதீனின் அடியாட்களால் தாக்கப்பட்டுள்ளனர். தஸ்லிமுதீனுக்குப் பரிந்து வந்த லல்லு, மருத்துவக் கல்லூரி மிக அதிகமாக நன்கொடை வசூலிப்பதைக் காரணம் காட்டி, கல்லூரியை மூடிவிட உத்தரவிட்டுள்ளார்.

## உ.பி. தேர்தலில் குண்டர் படைகள்

உ.பி. தேர்தலின்பொழுது, "குண்டர்களை கேடயமாகவே களத்தில் இறக்கிவிடப் போவதாக" ஓட்டுக் கட்சிகள் ஒளிவுமறைவின்றி அறிவித்துள்ளன. முலயாம் சிங்கின் சமாஜ்வாதி கட்சி, வெப்பு படை என்ற பெயரில் தனது குண்டர்களை அணிதிரட்ட உள்ளது. இப்படையின் அடியாட்கள் நான்கு அடி நீளமுள்ள தடியை ஆயுதமாக வைத்திருப்பார்களாம். வெப்பு படைக்கு எதிராக கன்ஷி ராமின் பகுஜன் சமாஜ் கட்சி, நீலப்படையைக் கட்டப் போவதாக அறிவித்துள்ளது. இவர்கள் இருவருக்கும் எதிரான இந்து மதவெறியர்கள் "கஜாய் சேனா" (தேர்தல் படை) என்ற பெயரில் தனது பாவரங்களை அணி திரட்டி வருகின்றனர்.

## திணிக்கப்படும் வறுமை

பாலஸ்தீன சுயாட்சிப் பகுதியில் வாழும் பாலஸ்தீன குடும்பங்களைப் பட்டினியின்றி காக்கும் பெரும் பொறுப்பு பாலஸ்தீனச் சிறுவர்களின் தலையில் விழுந்துள்ளது. விடியும் தருணத்தில் இஸ்ரேல் இராணுவத்தின் கழுகுக் கண்களில் இருந்து தப்பித்து, காடு முரடான சுற்றுப் பாதை வழியாக இஸ்ரேலில் நுழைந்து பென்சில், பிளாஸ்டிக் பொருட்களை விற்று வருவாய் ஈட்டுகின்றனர் இச்சிறுவர்கள். 16 வயதுக்கு மேற்பட்ட பாலஸ்தீனர்கள் வேலைதேடி இஸ்ரேலுக்கு வருவது தடை செய்யப்பட்டுள்ளதால் இந்த அவலம் எழுந்துள்ளது.

## 'நாய் விற்ற காசு குரைக்காது' என்ற நியாயம்

கடற்கரையில் அமெரிக்க பாணியிலான சூதாட்ட விடுதிகளை அமைத்து, கோவா மாநிலத்துக்குச் சொந்தமான கடற்பகுதிகளில் இச்சூதாட்ட விடுதிகளை நடத்திக் கொள்ள அனுமதி வழங்கியுள்ளது, அம்மாநில அரசு. இதற்கு எதிரான மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க, இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை நலப் பணிகளுக்குச் செலவிடப் போவதாக நியாயம் கற்பிக்கப்பட்டுள்ளது. சட்டசபையில் பா.ஜ.க. இதனை எதிர்த்த பொழுது, "மகாராஷ்டிராவில் நீங்கள் குதிரைப் பந்தயம் நடத்துவது போலத்தான் இதுவும்" எனக் கூறி, இந்து வெறியர்களை வாயடைக்கச் செய்துவிட்டது ஆளும் காங்கிரசு கட்சி.

ரியல் எஸ்டேட் முதலைகளுக்கு ஜால்ரா தட்டும் பா.ஜ.க. சிவசேனாவை எதிர்த்து பம்பாயில் நடந்த ஆர்ப்பாட்டம்





படிப்பகம்

www.padippakam.com

# பெரியார் திராவிடர் கழகம்
# வெங்காயத் தோலை உரிக்கும் வீர(ண)ர்கள்

கடந்த தேர்தலில் யாரை ஆதரிப்பது என வீரமணி தலைமையிலான திராவிடர் கழகத்தில் விவாதம் எழுந்தது. இது பற்றி முடிவு செய்ய தி.க. மத்திய நிர்வாகக் குழு 13.04.96-ல் திருச்சியில் கூட்டப்பட்டது. அதற்கு முன்பாக தென்சென்னை இளைஞரணித் தலைவர் மு. பாலகுரு அவர்கள் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த பொதுச் செயலர் கி. வீரமணிக்கு 'பார்ப்பன 'ஜெ'க்கு ஓட்டுப் போடக் கூடாது என அறிவிக்கும்படி' காரணங்களைத் தொகுத்து 6.4.96-ல் தொலைவரி (Fax) மூலம் தகவல் தந்துள்ளார்.

தி.க. மத்திய நிர்வாகக் குழுவில் அதிமுகவை ஆதரிக்கக் கூடாது என பெரும்பான்மை கருத்து வந்தும், திராவிடர் இயக்கங்களான தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க., என்ற 3 கட்சிகளில் எதற்கும் ஓட்டுப் போடலாம் என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். இதைக் கண்டித்து பாலகுரு மீண்டும் வீரமணிக்கு 18.4.96-ல் தொலைவரி மூலம் அறிக்கை அனுப்புகிறார். 23.4.96-ல் தென்சென்னை தி.க. இளைஞரணி கூட்டத்தை பெரியார் திடலில் கூட்டியுள்ளார். தி.க. துணைப் பொதுச் செயலர் சாமிதுரை தலைமையிலும், தலைமை நிலைய செயலர்கள் கலி பூங்குன்றன், ஆனூர் ஜெகதீசன் முன்னிலையிலும் கூடிய இக்கூட்டத்தில் கொள்கை விளக்கம் கேட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து பாலகுரு கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். இதற்கு விளக்கம் கேட்டு 26.4.96-ல் பாலகுரு தலைமை நிலையச் செயலர்களுக்கு கடிதம் எழுதினார்.

திரும்ப 28.4.96-ல் தென் சென்னை தி.க.இளைஞரணி செயலாளர் து. கலைச்செல்வன் பெரியார்திடலில் இளைஞரணி கூட்டத்தைக் கூட்டினார். அக்கூட்டத்தில் தி.க. மாநிலச் செயலாளர் ஒரத்தநாடு குணசேகரனின் செயலைக் கண்டித்தும், பாலகுருவை நீக்கியதை மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்றும், பார்ப்பன எதிர்ப்பைக் கைவிட்டதாகவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

ஒரத்தநாடு குணசேகரனிடம் அமெரிக்காவிலிருந்த வீரமணி நேரடியாகத் தொடர்பு கொண்டு அதிமுகவிற்கு ஓட்டுப் போட வேண்டும் என்பது தனது முடிவு எனக் கூறியதாகவும், அதைத் தமிழகம் முழுவதும் உள்ள தி.க. தோழர்களிடம் கூறும்படி ஆணையிட்டதாகவும் 25.4.96-ல் சென்னைக்கு தகவல் கிடைக்கவே அதைக் கண்டித்து தீர்மானம் போட்டனர். வந்திருந்த 160 உறுப்பினர்களும் இவற்றை ஆதரித்து கையெழுத்திட்டிருந்துள்ளனர்.

அதன்பின் சுமார் 200 இளைஞரணி உறுப்பினர்கள் தி.க.விலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். அதன்பின் விடுதலை இராசேந்திரன் உட்பட பலரும் தி.க.விலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் வீரமணி தலைமையின் கீழ் அணிந்திருந்த கருப்புச் சட்டை பார்ப்பன மயமாகி விட்டது என அறிவித்து, அதைக் கழற்றி விட்டு தந்தை பெரியாரின் இலட்சிய கருஞ் சட்டை அணியும் போராட்டம் ஒன்றை 25.6.96-ல் சென்னை அண்ணா சாலையிலுள்ள பெரியார் சிலை முன்பு நடத்தினர்.

இதுவரை தி.க.விலிருந்து வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்ட பலரும் கொள்கை ரீதியாகப் போராடாததாகவும், தாங்கள் மட்டுமே பெரியாரின் கொள்கையை நிலைநாட்டப் போராடி அதனால் சந்தர்ப்பவாத, பிழைப்புவாத வீரமணியால் வெளியேற்றப்பட்டதாகவும் கூறுகின்றனர்.

இவர்கள், தலைமை நிலையச் செயலராக இருந்த ஆனூர் ஜெகதீசனை தங்கள் பக்கம் வென்றெடுத்துள்ளனர். இவரைத் தலைவராகக் கொண்டு 30.7.96-ல் 'பெரியார் திராவிடர் கழகம்' என தனியே அமைப்பு கட்டி தொடக்க விழா நடத்தியுள்ளனர்.

சாராம்சமாக இவர்கள் வைக்கு குற்றச்சாட்டுகள் கீழ்க்கண்டவை தான்:

1. கடந்த 5 ஆண்டுகளில் பார்ப்பன எதிர்ப்புக் கொள்கை படிப்படியாக மழுங்கடிக்கப்பட்டே வந்து, தேர்தலுக்கு முன்பு அது பகிரங்கமாக் கப்பட்டு விட்டது. பார்ப்பன ஜெயலலிதா தலைமையிலான ஆட்சி மீண்டும்தமிழகத்தில் உருவாவதற்கு ஓட்டளிக்கலாம் என்று தி.க. மத்தியக் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றி, கொள்கை துரோகத்தை அதிகாரப்பூர்வமாகப் பிரகடனப்படுத்தி விட்டது.

2. பெரியார் கொள்கைக்கு எதிரான பார்ப்பனிய போக்குகள்- இயக்கத் தலைமையில் படிப்படியாக மேலோங்கி வளர்ந்தது. பெரியார், நூல்களை வெளியிடுவதும் நின்று போய், பெரியார் நடத்திய இதழ்கள் பாதுகாக்கப்படாமல், அழியும் நிலை உருவாகி விட்டது. இலட்சியத்துக்கான இயக்கம், தனி மனிதருக்கான கட்சியாக மாறும் போக்குகள் அதிகரித்துக் கொண்டே போய் கொள்கைகளும் அணுகுமுறைகளும், தடுமாற்றத்துக்கு உள்ளாகிக் கொண்டே வந்தன. கடைசியில் இலட்சியத்துக்கு எதிரான போக்குகளே தலைதூக்கி விட்டன.

**பெரியார் திராவிடக் கழகக் கட்சியின் துவக்க விழா: பத்தோடு பதினொன்று!**






படிப்பகம்

www.padippakam.com

3. கல்வி நிறுவனங்கள், வங்கி, சீட்டுக் கம்பெனி என பல நிறுவனங்களைத் தொடங்கி, வீரமணி ஒரு நல்ல வியாபாரியாகிவிட்டார்.

இவை ஏதோ புதியது, கடந்த ஐந்து ஆண்டுகளில் உருவானது என்பதைப் போன்று கூறுகின்றனர். இந்தப் போக்குகள் தி.க.வில் உள்ளன என்பதைப் பற்றி எமது புதிய ஜனநாயகம் இதழ்களிலும், அதற்கு முன்பே எமது தோழமை இதழான புதிய கலாச்சாரத்தில் 80-ம் ஆண்டுகளிலும் விமர்சனங்களாக முன் வைத்தமைதான்.

அப்போதெல்லாம் இந்த நபர்கள் நம்மை வெறித்தனமாக எதிர்த்து 'பார்ப்பனத் தலைமை' என மூச்சுக்கு மூச்சு முத்திரை குத்தினர். தனது குறைகள், பலவீனங்களைச் சுட்டிக் காட்டுபவர்கள் மீது பார்ப்பன முத்திரை குத்துவது அல்லது இனத் துரோகி என பட்டங்கட்டி, பிரச்சினையிலிருந்து நழுவிக் கொள்வது என்ற இந்தப் போக்குகள் பெரியார் காலம் தொட்டே தி.க.வில் நடைமுறையாக உள்ளவைதான்.

வீரமணி கும்பல் 5 லட்ச ரூபாய் நன்கொடை பெற்றுக் கொண்டு பார்ப்பன 'ஜெ'க்கு பாத பூஜை செய்ய ஆரம்பித்தது. மக்களே காறித் துப்பிய அரசியல் கழிசடை பார்ப்பன 'ஜெ'க்கு 'சமூக நீதி காத்த வீராங்கனை' என்று பட்டம் சூட்டி மகிழ்ந்தார், வீரமணி. 'ஜெயலலிதா ஆட்சிக்கு ஆபத்து வந்தால் தற்கொலைப் படையாக மாறுவோம்' என வீரமுழக்கமிட்டார். பெரியார் விருது வழங்க ஆலோசனை தந்து, முதல் விருதை தானே பெற்று அகமகிழ்ந்தார். அந்த புகழ் மயக்கத்தில் 'வாழ்நாள் முழுதும் துரோகம் செய்யமாட்டேன்' என உறுதி கொடுத்தார்.

அப்போதெல்லாம் இந்த பெரியார் தி.க.வினர் இந்த இழிநிலைகளை எதிர்த்துப் போராடவில்லை. இப்போதும் இச்செயல்களைக் கண்டிக்கவில்லை. மாறாக சரியானவை என்றே அறிக்கைகளில் கூறுகின்றனர். 'வாழ்நாள் முழுதும் துரோகம் செய்ய மாட்டேன்' என்று கூறியதை மட்டுமே சுட்டிக் காட்டுகிறார்கள். இதன் அர்த்தம் என்ன? ஆட்சியிலிருக்கும் வரை பாத பூஜை செய்வது சரி என்பதுதானே? இல்லை என்றால் இவ்வளவு மோசமான சந்தர்ப்பவாதத்தை சகித்துக் கொண்டு கழகத்திற்குள் இத்தனை நாட்களும் பிழைப்பு நடத்தியிருப்பார்களா?

இதற்கு ஒரு சப்பைக் கட்டாக, 'இது ஒரு அணுகுமுறைதான், கொள்கை அல்ல' என்று தலைமை விளக்கியதாம்; தனியே பயிற்சி வகுப்புகள் நடத்தியதாம்; இவர்களும் ஏற்றுக் கொண்டார்களாம். பார்ப்பன ஜெ தலைமையிலான ஆட்சியை சமுதாய நலனுக்குப் பயன்படுத்திக் கொள்வதில் இவர்களுக்கு இன்றைக்கும் முழு உடன்பாடு இருக்கிறது என்று பிரகடனப்படுத்தியுள்ளனர். ஆனால் தேர்தலில் பார்ப்பன ஜெயாவே முதலமைச்சராக வரவேண்டும் என தி.க. அதிகாரப் பூர்வமாக முடிவெடுத்தது மட்டுமே கொள்கைக்கு எதிரானதாம்.

ஜெயாவிடமிருந்து ''பெரியார் விருது'' வீரமணி பெற்றபொழுது வாய்ச்சவடால் பேர்வழிகள் வாய்மூடிக் கிடந்தது ஏன்?




எப்படி இருக்கிறது பாருங்கள்? ''பார்ப்பனராகப் பிறந்த அனைவருமே நம்பிக்கை துரோகம் செய்துவிடுவார்கள். அடுத்துக் கெடுக்கும் நரித்தனமும் சூழ்ச்சியும் அவர்களது ரத்தத்திலேயே ஊறியவை. இதற்கு விதிவிலக்கே கிடையாது'' என்று கூறிக் கொண்டே, அந்தப் பார்ப்பன ஜெ ஆட்சியை சமுதாய நலனுக்குப் பயன்படுத்திக் கொள்வார்களாம். இது எப்படி என்பது அவர்களுக்கே வெளிச்சம்!

'பார்ப்பானையும் பாம்பையும் கண்டால், முதலில் பார்ப்பானை அடி' என்று பெரியார் கூறியுள்ளார். அப்படிப்பட்ட கொடூரமானவர்கள் ஆட்சிக்கு வந்துவிட்டால் அவர்களையே சமுதாய நலனுக்கும் பயன்படுத்துவார்களாம்! எவ்வளவு சுய முரண்பாடு. கேட்டால் இது அணுகுமுறை, கொள்கையல்ல என சித்தாந்த விளக்கம் வேறு.

பகுத்தறிவாளர்களை விடுங்கள், ஒரு சராசரி மனிதர் என்ன எதிர்பார்ப்பார்? மனித சமூகத்திற்கே கொடிய நச்சு போன்ற பார்ப்பனீயத்தை எதிர்ப்பவர்கள் (நமக்கு இதிலே எவ்வித கருத்து வேறுபாடுமில்லை) அப்படிப்பட்ட பார்ப்பனீயத்தை உயர்த்திப் பிடிக்கும் பார்ப்பனர் ஆட்சிக்கு வந்தால் அவர்களை ஆட்சியிலிருந்து விரட்டப் போராடுவார்கள் என்றுதானே எதிர்பார்ப்பார்.

பார்ப்பன சங்கம் 'நம்மவா ஆட்சி' என அகமகிழ்ந்த 'ஜெ' ஆட்சியை, சங்கராச்சாரிகள் ஆதரிக்கும் 'ஜெ' ஆட்சியை வீரமணி கும்பல் ஆதரித்து பாத பூஜை செய்தது.

மாறாக, புதிய ஜனநாயகமும், ம.க.இ.க.வும் அதன் தோழமை அமைப்புகளும் பார்ப்பன - பாசிச ஜெ ஆட்சியின் மக்கள் விரோதப் போக்குகளை எதிர்த்துச் சமரசமின்றிப் போராடின. எண்ணற்ற வழக்குகள், சிறைக் கொட்டடிக் கொடுமைகள், உச்சகட்டமாக அத்தோழர்கள் மீது தடாவும், தேசியப் பாதுகாப்புச் சட்டமும் பாய்ந்தன.

ஆனால் இந்த சமரசமற்ற போராட்டத்தை இழிவுபடுத்துவது போல 'புதிய ஜனநாயகத் தலைமையிலுள்ளவர்கள் பார்ப்பனர்கள். இது தான் மிக அபாயகரமானது' என தமது 'விடுதலை'யில் பொய்களையும், அவதூறுகளையும் எழுதியது பிழைப்புவாத வீரமணி கும்பல். பார்ப்பனர்களைப் போன்றே ம.க.இ.க.வின் கருவறை நுழைவுப் போராட்டத்தை வன்முறைப் போராட்டம் என எதிர்த்தது. வற்றுக்கெல்லாம் துணை நின்று நம் மீது அவதூறுச் சேற்றை வாரியிறைத்தவர்கள்தான் இந்த விடுதலை, ராசேந்தி


தொடர்ச்சி 22-ம் பக்கம்
படிப்பகம்

www.padippakam.com

# புதிய கல்விக் கொள்கை: காசில்லாதவனுக்கு கதவைச் சாத்து

தாம்பரம் அருகே உள்ளது மேடவாக்கம் கிராமம். இங்குள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சுமார் 800 மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். ஆனால் போதிய ஆசிரியர்கள் இல்லை.

ஒரு ஆசிரியருக்கு 150 அல்லது 200 மாணவர்கள் இருந்தனர். கூடுதலாக ஆசிரியர்களை நியமிக்க அரசுக்கு கோரிக்கை வைத்தனர் கிராம மக்கள். அரசு ஆசிரியர்களை நியமிக்க மறுத்து விட்டது.

கிராமக் குழுவும் அப்பள்ளி அன்னை ஆசிரியர் கழகமும் இணைந்து தாங்களே ஆசிரியர்களை நியமிக்க முடிவு செய்தனர். அந்த ஆசிரியர்களுக்கு கிராம மக்களிடம் பணம் வசூல் செய்து சம்பளம் கொடுக்க முடிவு செய்தனர். அவ்வாறு ஆசிரியர்களை நியமிக்க கல்வி அதிகாரிகளிடம் அனுமதியும் பெற்றனர்.


அக்கிராமத்திலேயே படித்து வேலையற்றிருந்த மூவரை ஆசிரியர்களாக நியமித்தனர்.

சென்னை அசோக் நகரிலுள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலும் இதே போன்ற நிலைமைதான். ஆசிரியர் - பெற்றோர் சங்கத்தினர் அரசு அனுமதி பெற்று, மாணவர்களிடம் நிதி வசூலித்து, ஆசிரியர்களை நியமித்துள்ளனர்.

இங்கு மட்டுமல்ல. நாடு முழுவதிலுமுள்ள பெரும்பாலான ஆரம்பப் பள்ளிகளில் நிலைமை இன்னும் மோசமாக உள்ளது.

- 45 சதம் பள்ளிகளுக்கு கட்டிட வசதி கிடையாது
- 60 சதத்திற்கு மேற்பட்ட பள்ளிகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லை. ஓராசிரியர் பள்ளிகள் ஏராளம்.
- 50 சதம் பள்ளிகளில் குடிநீர் வசதி கிடையாது
- 70 சதம் பள்ளிகளில் விளையாட்டுத் திடல் இல்லை
- 25 சதம் பள்ளிகளில் கழிப்பிட வசதி கிடையாது.

கிராமப் புறங்களில் நிலைமை இன்னும் மோசமானது. 65 சதம் பேர் ஆரம்பப் பள்ளிப் படிப்பை முடிப்பதில்லை. இதில் 30 சதம் பேர் பள்ளியில் சேர்க்கப்படுவதேயில்லை என்பதுதான் அதிர்ச்சியளிக்கக் கூடிய உண்மை.




குழந்தைகளில் பலரும் பள்ளி செல்வதற்கு முன்பே தமது பெற்றோர்களுடன் உழைக்கச் சென்று விடுகிறார்கள். வேலைக்குப் போகவில்லை என்றால் உண்ண உணவில்லை என்ற நிலையில் அக்குழந்தை எப்படி பள்ளி செல்ல முடியும்?

நகர்ப்புறங்களில் நிலைமை பெரிதும் மாறிவிடவில்லை. இங்கும் குழந்தை உழைப்பு கணிசமானவர்களைப் பள்ளிக்குச் செல்லாமல் தடுக்கிறது.

இப்படி கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் உள்ள அடித்தட்டு உழைப்பாளி வீட்டுக் குழந்தைகளுக்கு கல்வி எட்டாக் கனியாகி வருகிறது.

இருக்கின்ற பள்ளிகளோ ஓராசிரியர் பள்ளிகளாக, மரத்தடி பள்ளிகளாகவே உள்ளன. பம்பாய் போன்ற பெருநகரங்களிலே கூட இதுதான் நிலைமை.

பல ஆரம்பப் பள்ளிகள் சிதிலமடைந்த கட்டிடங்களிலும் சுகாதார மற்ற சூழலிலும் உள்ளன. வித்தியாசமாக ஒஷிவாரா என்ற பம்பாய்ப் புறநகர் பகுதியிலுள்ள ஒரு நகராட்சிப் பள்ளி நான்கு மாடிக் கட்டிடத்தில் நடக்கிறது. ஆனாலும் பலன் இல்லை. காரணம் மாணவர்கள் எண்ணிக்கை 4500. ஆசிரியர்களோ 25 பேர் மட்டும் தான்.

ஒவ்வொரு வகுப்பிலும் ஆடு மாடு போல மாணவர்கள் நெருக்கமாக அடைக்கப்பட்டுள்ளனர். ஒரு வராண்டாவில் 1-வது வகுப்பும், 4-வது வகுப்பும் அக்கம்பக்கமாக நடக்கிறது. இடையில் தடுப்பு ஏதுமில்லை.

இருக்கின்ற ஆசிரியர்கள் தகுதியானவர்களா, ஆர்வமிக்கவர்களா என்றால் இல்லை. பீகாரில் பல ஆரம்பப் பள்ளிகளில் ஐந்து ஆண்டுகளாக ஆசிரியர்களுக்கு சம்பளமே தரப்படவில்லை. 'வக்கத்தவனுக்கு வாத்தியார் வேலை' என்ற நிலைமையே உள்

## தமிழ்ப்பள்ளியா? இலவசக் கல்வியா? அனுமதி கிடையாது

சென்னையிலிருந்து 30 கிமீட பயண தூரத்திலுள்ள ஒரு சிறு கிராமத்தில் ஆரம்பப் பள்ளிக் கூடம் இல்லை. அங்குள்ள குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால் 6 கி.மீ. தூரம் நடக்க வேண்டும். மிக அருகிலுள்ள பேருந்து நிறுத்தம்கூட 2 கி.மீ தொலைவிலுள்ளது.

ஏழை மக்களுக்கு உதவும் பொருட்டு அங்கு 1992-ல் 'மகாகவி பாரதியார் ஆரம்பப்பள்ளி' என்ற ஒன்றை முரளிதரன் என்பவர் தொடங்கினார். இப்பள்ளியில் இலவச கல்வி தருவதுடன், தமிழிலேயே பாடங்கள் நடத்தப்படுகின்றன.

அரசு அனுமதிக்கும், அங்கீகாரத்திற்கும் 1992 அக்டோபரில் விண்ணப்பித்தும் இன்றுவரை அனுமதியோ அங்கீகாரமோ வழங்கப்படவில்லை. லஞ்ச - ஊழலில் ஊறித் திளைக்கும் அதிகார வர்க்கக் கும்பல் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி இழுத்தடிக்கின்றனர். ஆட்சி மாறியும் அவலம் மாறவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

ளது. இவர்களிடம் என்ன ஆர்வமிருக்கும்? சொல்லித் தரப்படும் கல்வியின் தரம் பற்றி தனி புத்தகமே எழுத வேண்டும். வேத காலத்து மனப்பாடக் கல்வி தாய் மொழியில் தொடர்கிறது.

மத்திய அரசோ ஆரம்பக் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை படிப்படியாகச் குறைத்து வருகிறது. அந்த நிதியிலுமம் பெரும் பகுதி ஆசிரியர்களுக்கான சம்பளமாகவே செலவாகிறது.

பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப புதிய பள்ளிகள் தொடங்கப்படவில்லை. ஏற்கனவே உள்ள பள்ளிகளுக்கே கட்டிட வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி, ஆசிரியர் நியமனம் என முறையாகச் செய்ய வக்கற்ற அரசு, ஆரம்பக் கல்வி நிலையங்களையே மூடி வருகிறது. அவற்றை தனியாருக்கு தாரை வார்த்து, வியாபாரமாக்கி, ஏழைகளின் கல்வி உரிமையையும் தட்டிப் பறித்து வருகிறது.

° வேலன்

## மோசடி மதிப்பெண் பட்டியல் அம்பலம்

வடசென்னையில் உள்ள தியாகராஜர் கல்லூரியில் சுமார் 300 மாணவர்கள் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இவர்கள் அனைவரும் 2-ம் ஆண்டு, 3-ம் ஆண்டு பட்டப்படிப்பு படித்து வருபவர்கள்.

காரணம் என்ன? இவர்கள் கல்லூரியில் சேரும் போது போலியான மதிப்பெண் பட்டியலும், சான்றிதழ்களும் கொடுத்துச் சேர்ந்துள்ளனர். இந்த மதிப்பெண் பட்டியல், சான்றிதழ்கள் வெறும் ஏ4 அளவிலான (ஜெராக்ஸ் பேப்பர் அளவு) பாண்ட் தாளில் இருந்துள்ளது.

மேலும் நகரிலுள்ள எல்லா கல்லூரிகளிலும் இப்படி சுமார் 10 சதவீத மாணவர்கள் சேர்ந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

பல்வேறு அரசியல்வாதிகள், காவல்துறை அதிகாரிகள் இதில் தலையிட்டு அந்த 300 மாணவர்களை வெளியேற்றக் கூடாது என நிர்ப்பந்தம் செய்துள்ளனர். இதையும் மீறி நடவடிக்கை எடுக்கப்பட்டு, காவல்துறையில் புகார் செய்யப்பட்டு, அடுத்த கட்ட நடவடிக்கைக்கும் உத்திரவிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டும் தியாகராஜர் கல்லூரிக்கு இப்படி போலி சான்றிதமுடன் வந்தவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

## சிவப்பஞ்சலி

புதிய ஜனநாயகம் மற்றும் புதிய கலாச்சாரம் பத்திரிகைகளின் கல்பாக்கம் பகுதி முகவராகப் பணியாற்றி வந்த தோழர். சண்முகம், தமது 74-ஆம் வயதில் 5.8.96 அன்று இயற்கை எய்திவிட்டார்.

இளமைக் காலம் தொடங்கியே இந்தியக் கம்யூனிச இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்ட தோழர். சண்முகம், நாடெங்கும் நக்சல்பாரி இயக்கம் பற்றிப் பரவிய பொழுது, அதன் தலைமையை ஏற்றுக் கொண்டார்; அது காட்டிய அரசியல் பாதையில் உறுதியாக நின்று போராடி, சிறை சென்றார்.

சிறையில் இருந்து விடுதலையான பின், கல்பாக்கம் பகுதியில் ஒப்பந்தக் கூலியாகத் தனது வாழ்வைத் துவங்கினார். அன்று தொடங்கி மரணம் தழுவும் வரையிலும், கல்பாக்கம் பகுதி கிராம மக்கள் நலனுக்காக பலவிதப் போராட்டங்களில் முன்னின்று ஈடுபட்டார். முதுமையிலும் போராட்டப் பாதையை விட்டு விலகிவிடவில்லை அவர்.

அனைத்து நக்சல்பாரி குழுக்களுடனும் நட்புரீதியாக உறவு கொண்டிருந்த தோழர். சண்முகம், கடந்த ஒரு வருடம் முன்பு நமது அரசியல் நிலைப்பாடுகளே சரியானது என ஏற்றுக் கொண்டு செயல்படத் துவங்கினார்.

தோழர் இறந்த செய்தி கேட்டு அப்பகுதி கிராம மக்கள் கதறியழுதனர். அவர் எவ்வளவு தூரம் அம்மக்களின் நம்பிக்கைக்கும் அன்புக்கும் பாத்திரமாயிருந்தார் என்பதற்குச் சான்றானது. எவ்விதச் சடங்குகளும் இன்றி, "வீர வணக்கம், வீர வணக்கம்! தியாகத் தோழருக்கு வீர வணக்கம்" என்ற முழக்கத்துடன், அவரது உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டது. பல்வேறு தொழிற்சங்க முன்னணியாளர்களும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு, அஞ்சலி செலுத்தினர். தோழரை முன்னுதாரணமாகக் கொண்டு, எவ்விதச் சமரசமின்றிப் போராடி மக்கள் அதிகாரத்தைப் படைப்போம் என இவ்வேளையில் நாம் உறுதி பூணுவோம்!

ஆசிரியர் குழு

## கந்து வட்டி ரவுடிக்குத் துணைபோகும் மதுரை போலீசு

மதுரை ஜெய்ஹிந்த்புரம் பகுதியைச் சேர்ந்தவர் திப்பு சுல்தான் என்ற இளைஞர். இவர், கீரைத்துறை பகுதியைச் சேர்ந்த கந்துவட்டி ரவுடி கோக்கு பாண்டி என்பவனிடம் இருபத்தைந்து ரூபாய் கடன் வாங்கியிருந்தார். மிகவும் வறுமையால் வாடும் இவருக்கு, இந்த அற்பத் தொகையை ஒரு சேர பார்ப்பதே மிக அரிதானது. கடந்த ஜூலை மாதம் 10-ந் தேதி கோக்கு பாண்டி இந்தக் கடனை உடனே திரும்பக் கொடுக்கச் சொல்லி, திப்பு சுல்தானை கத்தியைக் காட்டி மிரட்டிச் சென்றான்.

இந்த ரவுடியால் தனது குடும்பம் தாக்கப்படும் என அஞ்சிய திப்பு சுல்தான், கீரைத்துறை போலீசு நிலையத்தில் கோக்கு பாண்டி மிரட்டியது தொடர்பாக புகார் கொடுத்துள்ளார். ஆனால் கோக்கு பாண்டியின் மாமூல் பட்டியலில் உள்ள அப்போலீசாரோ, திப்பு சுல்தானை மிரட்டி அனுப்பி விட்டனர். இதன்பின் அவ்விளைஞர் மதுரை மாவட்ட ஆட்சியரிடம் இது பற்றி புகார் மனு கொடுத்தார்.

அம்மனு, மேல் விசாரணைக்காக கீரைத்துறை போலீசு நிலையத்திற்கே அனுப்பி வைக்கப்பட்டது. விசாரிப்பதற்குப் பதிலாக, அம்மனுவையே கோக்கு பாண்டியிடம் கொடுத்துவிட்டனர் அப்போலீசார். இதனால் ஆத்திரமாகிப் போன கோக்கு பாண்டி, தனது அடியாட்களோடு வந்து நடுரோட்டில் திப்பு சுல்தானை மிரட்டி கடத்திச் சென்றான். ரவுடிக் கும்பலின் இந்த அராஜகத்தைத் தட்டிக் கேட்ட பகுதி பு.மா.இ.மு. தோழரையும் திப்பு சுல்தானின் தாயாரையும் கத்தியைக் கொண்டு தாக்க வந்தது இக்கும்பல்.

கடத்திச் சென்ற திப்பு சுல்தானை போலீசு நிலையத்தில் வைத்து ஆய்வாளர் தேவசகாயமும் ரவுடிக் கும்பலும் மிரட்டுவதை அறிந்த பு.மா.இ.மு. தோழர்கள், காவல்துறை உயர் அதிகாரிகளிடம் புகார் செய்து திப்பு சுல்தானை மீட்டனர். கந்துவட்டி ரவுடிக் கும்பலுக்கும் கீரைத்துறை போலீசாருக்கும் இருந்துவரும் தொடர்பை அம்பலப்படுத்தி, பகுதியெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. இதன் பின்னரே கோக்கு பாண்டி மீது வழக்கு தொடரப்பட்டு, கைது செய்யப்பட்டான். திப்பு சுல்தானை இந்த ரவுடிக் கும்பல் தாக்கும் அபாயம் இன்னும் உள்ளதால், பகுதி மக்களிடம் இப்பிரச்சனையைப் பிரச்சாரமாக எடுத்துச் சென்றனர் பு.மா.இ.மு.வினர்.

தகவல்: பு.மா இ.மு., மதுரை


படிப்பகம்

www.padippakam.com

ரன் உட்பட பெரியார் தி.க.வினர் அனைவருமே.

இந்த அவதூறுகளுக்கு பதிலாக கடந்த 1994 மார்ச் 15 இதழ் முதல் 1994 அக்டோபர் 1 இதழ் முடிய பு.ஜ.வின் எட்டு இதழ்களில் 31 பக்கங்களில் வீரமணியின் துரோகங்களையம், சந்தர்ப்பவாதம் - பிழைப்புவாதங்களையும் ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்தி எழுதினோம். ''வீரமணி இன்று செய்துவரும் துரோகங்களுக்கு அடிப்படை ''பெரியாரிய''த்திலும் அதை உருவாக்கிய பெரியாரிடமுமே இருந்திருக்கிறது. பெரியாரிடத்தில் இருந்த ''குறைபாடு''களை அங்கீரித்து, நிராகரிக்காத எவரும் வீரமணி கும்பலின் துரோகத்தனங்களை முற்றாக அம்பலப்படுத்தவோ, முறியடிக்கவோ முடியாது; அப்படிச் செய்யாதவர் எவரும் தாமும் துரோகத்தனத்துக்கு பலியாவது தவிர்க்க முடியாது. அப்படிச் செய்வது ''பெரியாரிய''த்துக்கும் பெரியாருக்கும் எதிரானதும் அல்ல'' என்று எழுதினோம்.

'கொள்கையில் தடம் புரளாதவர்' என்று கூறப்படும் பெரியார், ஆட்சியில் இருப்பவர்களை ஆதரிப்பதற்காக எதையும் செய்யக் கூடியவராக இருந்தார். தனக்கு உடன்பாடற்றவைகளை எல்லாம் பார்ப்பன முத்திரை குத்துபவராக இருந்தார் என்பதற்கு இரண்டு சான்றுகளைப் பாருங்கள்'' என பு.ஜ.வில் எழுதி ஆதாரங்களைக் குறிப்பிட்டிருந்தோம்.

1. 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை பெரியார் கடுமையாக எதிர்த்தார்.

2. கருணாநிதி ஆட்சியில் குடமுருட்டி பாலத்தில் மீன்பிடிக்க வைத்த குண்டு தன்னைக் கொல்ல நக்சல்பாரிகள் வைத்தது என கருணாநிதி புளுகினார். அதை அப்படியே ஏற்று நக்சல்பாரி புரட்சியாளர்களை பார்ப்பன அமைப்புகளோடு சேர்த்து முத்திரை குத்தி அவதூறு செய்தார் பெரியார்.

இதே வழியில்தான் தனது 'பார்ப்பன ஜெ' ஆதரவு, அடிவருடி வேலைகளை சுட்டிக் காட்டி விமர்சிக்கும் புதிய ஜனநாயகத் தலைமையை பார்ப்பனத் தலைமை என முத்திரை குத்தி பொய்களை எழுதி அவதூறு செய்தனர் தி.க.வினர். உடனிருந்தனர் பெரியார் தி.க.விலுள்ளவர்கள்.

வீரமணி கும்பலுடன், அதிமுக-வை ஆதரிக்கக் கூடாது என தென் சென்னை இளைஞரணி தி.க. போராடிய போது கழகப் பொருளாளர் குப்புசாமியும், துணைப் பொதுச் செயலாளர் சாமிதுரையும் 'பெரியாரே பார்ப்பனர்களை, பார்ப்பனத் தலைமையை ஆதரித்தார்' என ஆதரங்களை முன் வைத்தனராம். அது பொய்ப் பிரச்சாரம் என பெரியார் தி.க.வினர் எழுதுகின்றனர்.

ஆனால் இதே வீரமணி கும்பலும் விடுதலை இராசேந்திரனும் பு.ஜ.வில் பெரியார் பார்ப்பனர்களை ஆதரித்தார் என வரலாற்று உண்மைகளை ஆதாரத்துடன் முன் வைத்த போது, நம்மீது ஆத்திரத்துடன் பாய்ந்து அவதூறு செய்தனர். ஆனால் இன்றைக்கு வீரமணி கும்பல் தனது 'பார்ப்பன ஜெ' ஆதரவுக்காக நாம் முன் வைத்த வாதங்களை வைத்து, தன்னை நியாயப்படுத்தி உள்ளது.

இந்த உண்மைகளை தி.க.வே முன் வைத்தமைக்கு வேண்டுமானால் நாம் இந்த பெரியார் தி.க.வினருக்கு நன்றி கூறலாம். ஆனால் பெரியார் தி.க.வினர் 'பூனை கண்ணை மூடினால் உலகம் இருண்டு போன'தாக இந்த விசயத்திற்கு ஆத்திரப்பட்டால் தவறு.

நடந்த வரலாற்று உண்மைகள் பொய்யாகி விடுமா? அல்லது அவற்றை இருட்டடிப்பு செய்து பெரியார் எவ்வித விமர்சனங்களுக்கும் அப்பாற்பட்டவர் எனப் புனிதப்படுத்தி விட முடியுமா? மாறாக யாராக இருந்தாலும் அவர்களிடமுள்ள சரி, தவறுகளைப் பகுத்தாராய்ந்து, தவறுகளை நிராகரித்து, சரியானவற்றை உயர்த்திப் பிடித்து அவற்றை நடைமுறைப்படுத்தப் போராட வேண்டும். இதுதான் சரியான அணுகுமுறையாகும்.

அதேநேரம் எதிரிகள் கூறும் அவதூறுகளை நாம் உண்மை என எடுத்துக் கொண்டு வாதப் பிரதிவாதங்கள் நடத்திக் கொண்டிருக்க முடியாது.

''பெரியார் அடிக்கடி ஒன்றைக் கூறுவார். ''நான் ஈ.வெ. ராமசாமி சொல்கிறேன் என்பதற்காக நீங்கள் எதையும் ஒப்புக் கொள்ள வேண்டியதில்லை. உங்கள் சொந்த புத்தியைக் கொண்டு நன்றாக யோசித்துப் பாருங்கள். உங்கள் சொந்த புத்திக்கு ஏற்புடையதாக இருந்தால் மட்டுமே எது ஒன்றையும் ஒப்புக் கொள்ளுங்கள்'' என்பார் பெரியார். காரல் மார்க்சிடம் அந்தப் பண்பு இருந்தது. ''எல்லாவற்றையும் சந்தேகியுங்கள்; விமர்சனப் பார்வையோடு பாருங்கள்'' என்றார்.'' (புஜ 1 அக்.'94 இதழ்-பக்.23)

ஆனால் இன்றைக்கோ இந்த 'பகுத்தறிவுச் சிங்கங்கள்' நாம் விமர்சனம் வைக்கும் போது பாய்ந்து குதறி பார்ப்பனத் தலைமை என முத்திரை குத்துவதும், அதே நேரம் நாம் விமர்சனமாக முன்வைத்தவைகளையே தமது சந்தர்ப்பவாத, பிழைப்புவாத நடவடிக்கைகளுக்கு எடுத்து முன் வைப்புதுமாக செயல்பட்டு வருகின்றனர்.

கொள்கையிலிருந்து விலகுவதாகப் பிரிந்து தனியே பெரியார் திராவிடர் கழகம் கண்டுள்ளவர்கள் இந்த சந்தர்ப்பவாத, பிழைப்புவாத வீரமணி கும்பலிடமிருந்து எவ்விதத்திலும் வேறுபட்டதாக இல்லை.

1. கடந்த ஐந்து ஆண்டுகாலமாக பார்ப்பன ஜெக்கு பாத பூஜை செய்ததை எந்த கட்டத்திலும் எதிர்க்கவில்லை. 'பார்ப்பன ஜெ முதல்வரான பிறகு, அந்த ஆட்சியை சமுதாய நலனுக்கு (தமது பிழைப்பு வாதத்திற்கு) பயன்படுத்திக் கொள்வதில் இப்போதும் முழு உடன்பாடு உண்டு' என்றுதான் இன்றைக்கும் 'கொள்கை' முழுக்கமிட்டுள்ளனர்.

2. பெரியாரிடமுள்ள குறை - நிறைகளைப் பரிசீலித்து குறைகளை விமர்சித்து நிராகரித்து நிறைகளை ஏற்றுக் கொள்ளும் அணுகுமுறை இவர்களிடமும் இல்லை என்பதையே தமது வெளியீட்டில் வெளிப்படுத்துகின்றனர். அதாவது பெரியார் அவரே முன் வைத்த பார்ப்பன எதிர்ப்பு நிலைப்பாட்டுக்கு மாறாக பார்ப்பன ஆதரவு நிலைப்பாடு எடுத்த வரலாற்று உண்மைகளை கண்மூடித்தனமாக மறுக்கின்றனர். இது தற்போது வீரமணி எடுத்துள்ள நிலைப்பாட்டுக்கு எடுத்துச் செல்லவே உதவும்.

3. எதிர்க்கருத்து வரும்போது, பார்ப்பன முத்திரை குத்தி திசை திருப்புவது, அல்லது விமர்சனத்திலுள்ள விசயத்திலிருந்து நழுவிச் செல்லுவது என்ற கலையில் தேர்ந்த விடுதலை ராசேந்திரன் முக்கிய தலைவர்களில் ஒருவராக உள்ளார்.

4. அஇஅதிமுக நிச்சயமாக தோற்கும், திமுக நிச்சயமாக வெற்றி பெறும் என்ற நிலையில் ஆட்சியமைக்கப் போகும் கட்சியை ஆதரிக்காமல், தோற்கும் கட்சியை ஆதரிக்கும் வீரமணி என்றுதான் குற்றச்சாட்டுகளில் ஒன்றாக கூறியுள்ளனர். மாறாக தப்பித் தவறி 'ஜெ' வெற்றி பெற்றிருந்தால் இந்தப் 'பெரியார் தி.க.' தோன்றியே இருக்காது என்பதுதான் உண்மை.

ஏனெனில் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர்தான் கழகம் உருவாக்குவது என முடிவெடுத்துள்ளனர்.

தமிழினத்திற்கும், தமிழகத்திற்கும் துரோகங்கள் செய்த 'பார்ப்பன ஜெ' ஆட்சிக்கு பாதபூஜை செய்வதற்கு துணை நின்ற இவர்கள் இன்றைக்கும் கூட அதற்கு வருத்தம் தெரிவிக்காததோடு, அது சரி என்று கூறுவதிலிருந்தே இவர்களின் சந்தர்ப்பவாதப் பிழைப்புவாதப் போக்கை நாம் இனம் காண முடியும்.

● சோமு


படிப்பகம்

www.padippakam.com

# அ.இ.பு.ப.மை. - சென்னை மாநாடு: கலாச்சாரத்தில் புதிய தடம்

அகில இந்திய புரட்சி பண்பாட்டு மையம (அ.இ.பு.ப.மை -AILRC) -த்தின் ஆறாவது மாநாடு, கடந்த ஆகஸ்டு மாதம் 9,10 தேதிகளில் சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. ஏகாதிபத்திய மேலாதிக்க வல்லரசுகளால் நாடு மறுகாலனியாக்கப்படும் இச்சூழலில், அ.இ.பு.ப.மையத்தின் இந்த ஆறாவது மாநாடு, "ஏகாதிபத்திய தாக்குதலும் - நமது பண்பாட்டு எதிர்தாக்குதலும்" எனும் தலைப்பை மையப்படுத்தி நடத்தப் பெற்றது.

தமிழ்நாட்டில் இருந்து மக்கள் பண்பாட்டு பேரவை, மக்கள் கலை இலக்கியக் கழகம், மக்கள் கலை மன்றம் மற்றும் ஜன கலா சாகித்ய வேதி - கேரளா, ஜன கலா மண்டலி - கர்நாடகா, ஆவ்ஹான் நாட்ய மஞ்ச் - மகாராஷ்டிரா மற்றும் ஆவ்ஹான் நாட்ய மஞ்ச் - பம்பாய், புரட்சிகர எழுத்தாளர் சங்கம் - ஆந்திரா, ஜன கலா மஞ்ச் - ம.பி., ஜன சம்ஸ்க்ருதி நாட்ய மஞ்ச் - குஜராத், விகல்ப் - டெல்லி, அ.இ.பு.ப.மை. - டெல்லி (கிளை), கிராந்திகாரி புத்தி ஜீவி சங்கம் - பீகார், கிராந்திகாரி சம்ஸ்கிருதி சங்கம் - பீகார், புரட்சிகர எழுத்தாளர்கள் - கலைஞர்கள் - அறிவு ஜீவிகள் சங்கம் - மேற்கு வங்கம், கிராந்திகாரி சாஹித் சபா - பஞ்சாப் உள்ளிட்ட 16 புரட்சிகர அமைப்புகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டன.

9.8.96 வெள்ளி காலையில் மக்கள் பண்பாட்டு பேரவையைச் சேர்ந்த தோழர் செந்தாரகை, புரட்சிகர பண்பாட்டு மையத்தின் கொடியினை ஏற்றி வைக்க, அதையடுத்து புரட்சிக்காகத் தங்கள் இன்னுயிரை ஈந்த தோழர்களுக்கு வெப்பஞ்சலி செலுத்தப்பட்டது. அனைத்து அமைப்புகளும் தங்கள் தாய்மொழியில் "கஷ்டஜீவிகள் நாங்கள் கம்யூனிஸ்டுகள்" என்ற பாடலைப் பாடி, தியாகிகளை நினைவு கூர்ந்தனர். இதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓவியர் தோழர் மருதுவால், தோழர் சிட்டபிரசாத் பெயர் சூட்டப்பட்ட ஓவிய அரங்கம் திறந்து வைக்கப்பட்டது.

தோழர் அப்பு அரங்கில், மாநாட்டுக்கு வந்திருந்த ஐநூறுக்கும் அதிகமான பிரதிநிதிகளையும், பார்வையாளர்களையும் மக்கள் கலை மன்றத்தைச் சேர்ந்த தோழர் இல. கோவிந்தசாமி வரவேற்றுப் பேச, திருச்சி அரசு கல்லூரியைச் சேரந்த கோ.கேசவன் தொடக்கவுரை ஆற்றினார். அகில இந்தியப் புரட்சி பண்பாட்டு மையத்தின் செயல்பாடுகள் பற்றிய அறிக்கையை, அதன் செயலர் தோழர். வரவர ராவ் வாசித்தார். "மாவோவின் சிந்தனைகள்", "இந்தியப் பெருமுதலாளி வர்க்கம்" என்ற இரு நூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, வெளியிடப்பட்டன.

மாநாட்டின் முதல் நாள் மதிய அமர்விலும் இரண்டாம் நாள் காலை அமர்விலும் உறுப்பு அமைப்புகளால், "ஏகாதிபத்திய தாக்குதலும் - நமது பண்பாட்டு எதிர்தாக்குதலும்" என்ற பொருள் குறித்து, பல தலைப்புகளில் அறிக்கைகள் வாசிக்கப்பட்டன. "வணிகமயமாகும் கல்வி" என்ற தலைப்பில், ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஹரகோபால்; "கலாச்சாரத் தளத்தில் ஏகாதிபத்திய தாக்குதல் - அறிவு ஜீவிகளின் பாத்திரம்" எனும் தலைப்பில் கேரளாவைச் சேர்ந்த தோழர் எம்.எம்.சோமசேகரன்; "தமிழ்நாட்டில் கலாச்சாரச் சூழல்" குறித்து மக்கள் பண்பாட்டு பேரவை தோழர் நடராசன்; "சிறைபபட்ட இலக்கியம்" என்பது குறித்து அ.இ.பு.ப.மை-ன் பொதுச் செயலர் தோழர் வரவர ராவ்; "உலகமயமாக்கமும் தேசியமும் - பண்பாட்டுச் சவால்கள்" பற்றி மக்கள் கலை இலக்கிய கழகத்தைச் சேர்ந்த தோழர் மருதையன் ஆகியோர் கருத்தரங்கில் அறிக்கைகளை முன் வைத்தனர்.

முதல் நாள் மாலையில் பல்வேறு குழுக்களைச் சேர்ந்த கவிஞர்கள் பங்கெடுத்துக் கொண்ட கவியரங்கம் நடந்தது. கவியரங்கம் முடிந்த பின், நள்ளிரவு வரையிலும் புரட்சிகர கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இரண்டாம் நாள் மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிந்த பின், 3,000-தோழர்கள் கலந்து கொண்ட ஊர்வலம் தொடங்கியது. நமது நாட்டின் பல்வேறு மொழிகளில் விண்ணதிர கோஷங்கள் முழங்க, இவ்வூர்வலம் அசோக் நகரில் தொடங்கி ஜாபர்கான் பேட்டை வழியாக சைதாப்பேட்டை தேரடி திடலைச் சென்றடைந்தது.

அத்திடலில் நடந்த பொதுக் கூட்டத்தில் அகில இந்திய புரட்சி பண்பாட்டு மையத்தின் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் வரவர ராவ், மக்கள் கலை இலக்கிய கழகத்தைச் சேர்ந்த தோழர் காளியப்பன், மக்கள் பண்பாட்டு பேரவையைச் சேர்ந்த தோழர் சின்னபையன், மக்கள் கலை மன்றத்தைச் சேர்ந்த இல. கோவிந்தசாமி ஆகியோர் ஏகாதிபத்திய நச்சுக் கலாச்சாரம், இந்து மதவெறி பாசிசத்தை முறியடிக்க வேண்டியதை வலியுறுத்திப் பேசினர்.



சென்னை பூண்டதொரு புரட்சிக் கோலம்

ஆந்திராவில் மக்கள் யுத்தக் குழுவின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரியும், ஆபாச சீரழிவுகளைப் பரப்பும் செயற்கைக் கோள் தொலைகாட்சி ஒளிபரப்புகளைத் தடை செய்யக் கோரியும், இந்து மதப் புனிதக் கோவில்களை விடுவிக்க விசுவ இந்து பரிஷத் கட்டவுள்ள குண்டர் படையைக் கண்டித்தும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பொதுக் கூட்ட மேடையில் வாசிக்கப்பட்டன.

தோழர்களின் உரையினூடேயே, பொதுக்கூட்ட மேடையில் புரட்சிகர கலை நிகழ்ச்சிகளும் தொடர்ந்தன. விரிந்த கண்களோடு இதைக் கண்டும், கேட்டும் லயித்து நின்ற பொதுமக்களுக்கு, "இதோ! ஓட்டுக் கட்சி அரசியலுக்கு மாற்றாக, அகில இந்திய புரட்சி பண்பாட்டு மையம் நம்முன்னே உள்ளது" என்ற நம்பிக்கையை ஊட்டுவதாக அமைந்தது.

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Madras - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Madras - 600 024. Editor: R. SHANMUGA RAJ

www.padippakam.com
Regd. No TN/MS(S) 622

இதோ உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் இந்தத் தொழிலாளி மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள பிவாண்டியைச் சேர்ந்தவர். அறுபதுக்கும் மேற்பட்ட இவரது சக தொழிலாளிகள் இன்று உயிருடன் இல்லை. வயிற்று வலியால் துடித்து, வாந்தியெடுத்து, பேதியாகி, மயங்கிச் சுருண்டு விழுந்து, மூச்சு முட்டி சிறுகச் சிறுக இறந்து போனார்கள். அவர்கள் உண்ட உணவே நஞ்சாகிப் போனதுதான் இதன் காரணம். பிவாண்டி நகராட்சிக்கு சென்ற ஆண்டு வருமானம் 52.65 கோடி ரூபாய். படத்திலுள்ள இவரைப் போல, இறந்தவர்களைப் போல, இன்னும் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர்களைப் போல இரண்டு லட்சம் விசைத்தறி தொழிலாளர்களின் உதிரத்தால் வந்ததுதான் இந்த வருமானம். கிராமத்தில் குடும்பத்தை விட்டு விட்டு, பிழைப்பு தேடி பிவாண்டி வந்த இந்தத் தொழிலாளர்களுக்கு, சுகாதாரமிக்க சிற்றுண்டிச் சாலையை அமைத்துத் தர நகராட்சிக்கு மனமில்லை; அதன் அலட்சியப் போக்கே இந்தத் தொழிலாளர்களின் உயிரைக் குடித்த எமனானது.



# இதுதான் இன்றைய இந்தியா



இதோ இந்த 'வசந்த மண்டபம்' திரைப்பட அரங்க நிர்மாணம் அல்ல. ஒரு ஐந்து நட்சத்திர விடுதியின் மது பான - குளிர்பானக் கூடம். நகரங்கள் எங்கிலும் கூலித் தொழிலாளர்கள் வயிற்றுப் பசிக்கு, ஈக்களைப் போல "கையேந்தி பவனை"ச் சுற்றி வரும் பொழுது, மேட்டுக்குடி கூட்டம் ஐந்து நட்சத்திர விடுதிகளில் உணவைக் கொறிக்கிறது. நெய்யும் பருப்பும் இவர்களுக்கு அலுத்துப் போன போது, "மெக்டோனால்டு", "கென்டக்கி", "பிஸாஹட்" என அமெரிக்க கோழிக்கறி உணவு விடுதிகளைத் திறந்து வை கின்றனர் இந்திய ஆட்சியாளர்க உண்ண, உடுத்த, குடிக்க எல்லாமே இவர்களுக்கு இன்று சர்வதேச தரத்தில்; அதுவும் இந்தியாவிலேயே பிறகென்ன கவலை இவர்களுக்கு?

உதிரம் சிந்தும் தொழிலாளிக்கு நஞ்சாகிப் போன உணவு; அவனது உதிரத்தைக் குடித்தவர்கள் வாயைக் கொப்பளிக்கவோ தாது நீர் புட்டி. இனியுமா இந்த அநீதி தொடர அனுமதிப்பது?